www.tamilarangam.net



பல்முனைப்பேட்டி.

வாசுதேவ நாணயக்கார.

# அருவி

ARUVI இலங்கையிலிருந்து வெளிவரும் ஜனரஞ்சக சஞ்சிகை. மார்கழி 1991 இதழ் - 4

யாழ்நகர் வாழ்வு



சமாதானத்திற்கு

ஒரு புதிய தூதுவர்







சோவியத்யூனியனில்

ஏனிந்த மாற்றங்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பால்ய நண்பனே!

குழந்தைப் பொழுதிற் கண்ட
கள்ளமற்ற மனமும், அன்பும்
பழமை உறவுகளின்
சிதையாத
பசுமை வடிவும், சுவையும்
தேனென நினைவில் நிற்க
பால்ய நட்பை நாடி
அருகிற் போன போது

–நொறுங்கிப் போனேன்–

சொல்லிட வெட்கிக்கிறேன்.
உலகின் பிரமாண்டத்தில் ஊறும்
எறும்பினிற் சிறியனாய் நான்
சிறுத்துப் போனேன்.

நண்ப,
ஓ, என் உயிர் நண்ப!
உன்னிடம் என்ன கேட்டேன்
நலமா என்பதைத் தவிர.
அப்போது பார்த்துத்தான்
அந்தக் கடிகார முட்களுக்கும்
நேர மொன்றிருப்பது
ஞாபகம் வந்ததோ?
சென்றுவா
அவசரம்தான்.

என் புத்திக்கு இது நல்ல
செருப்படி

உறவுகள் பொருளுடன் பிணைந்திருக்க
உணர்வுகள் மட்டும் உதிரியாய் உலவுமோ?
என் மடமையை என் சொல?

உலகிலே
இதயங்களை உருக்கி
மறுவார்ப்புச் செய்து தரும்
எந்திரங்கள் எங்கோ உண்டு.

பணக் குகைக்குள்
புகுந்து கொண்ட பின்
மனக் கதவைப் பூட்டித் தாளிடுவது
பெருங்கடினமல்ல.

அன்பும்
விலை கூவிக்
கடைகளில் விற்கப்படும் காலம்
மிக விரைவில் வரும்.

நல்லது நண்பனே
மீண்டும் ஒரு பிள்ளைப்பருவம்
வந்தாற் சந்திப்போம்.
விடைதந்தேன்
என் இதயத்திலிருந்தே.

–மதுரகவி.

www.tamilarangam.net

# உள்ளடக்கம்



சோவியத் யூனியன் 74 ஆண்டுகளின் பின் பெரு மளவு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மேற்கத்தய நாடுகளின் நிதியுதவி கோரியாசிக்கும் நிலை எப்படி வந்தது?



தமிழ் மக்களுக்கு இன்று தலை வர்கள் இல்லாது போய்விட்டார் கள் அவர்கள் வந்த பிறகுதான் ஏதும் கூறமுடியும் ........



வெளியே வசிக்கும் எல்லோருக்கும் நாங்கள் ஒரு விந்தையாய்த் தெரியலாம். ஒரு சிலர் எம்மைச் சந் திக்க நேர்ந்தால் எப்படி உங்களால் வாழ முடி கிறது என வியந்து கேட்பர்.



மாகாண சபையை ஒரு ஆரம்ப மாகக் கொள்ளலாம் இதன் கீழ் முஸ்லீம்களுக்கு ஒரு உபசபையை ஏற்படுத்துவதன் மூலம் அவர்க ளின் அபிலாசைகளையும் திருப்தி செய்யலாம் ........


இதைக் கொஞ்சம் கேளுங்கள் .... 2

யாழ் நகர வாழ்வு ...... 3

சிறுகதை: காலமாற்றம் .... 5

உலக அரசியல்

சோவியத் யூனியனில் ஏனிந்த மாற்றங்கள் ...... 6

சிறுகதை: பூமியிலே ..... 12

நாட்டு நடப்பு: சார்க் மகாநாடு .... 16

பல்முனைப் பேட்டி: வாசுதேவ நாணயக்கார ... 18

சிறுகதை: குட்டிநாய் .... 21

சிறுகதை: நன்றி மறந்தவன் ...22

சந்திப்பு: B. B. C. ஆனந்தி ....25

பல்முனைப் பேட்டி: அமைச்சர் தொண்டமான் ...... 24

அறிமுகம்: சஞ்சிகை ஓசை ..28 28

சினிமா: கொலுமுதே குணாட்டுவ .... 31

கவிதாப் பிரவாகம் .... 32


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இதைக் கொஞ்சம் கேளுங்கள்

### முன்மொழிவுகள்.

இன்றுவரை இலங்கையின் இனப் பிரச்சினையை தீர்த்து வைக்க எந்த உருப்படியான வழியும் பிறக்கவில்லை. யுத்தம் செய்வதைத் தவிர. ஆனால் அதை எட்டுவதற்காக என்றே எல்லோரும் பாடுபடுகிறார்களென ஒவ்வொருவரும் சொல்லிக் கொள்கிறார்கள். அண்மையில் அமைச்சர் தொண்டமான் ஒரு தீர்வுக்கான பிரேரணை யொன்றை வெளியிட்டிருந்தார். இதுதான் முதன் முதலில் ஒரு அரசாங்க அமைச்சர் வெளியிட்ட தீர்வுக்கான முன்மொழிவு. ஆனாலும் அது அரசாங்கத்தின் சார்பிலன்றி தனிப்பட்ட திரு. தொண்டமானால் அவரது கட்சியான சி. டபிள்யு. சி யின் சார்பில் முன்வைக்கப் பட்டதாகவே இருக்கிறது. இதில் எழுந்த சந்தேகமும் ஏற்பட்ட சர்ச்சையும் யாதெனில் எப்படி ஒரு அமைச்சர் அரசாங்கத்தின் உடன்பாடில்லாமல் இப்படி ஒரு பிரேரணையை முன்வைக்க முடியும் என்பது தான். அரச தரப்பின் பா. உக்கள் உட்பட பத்திரிக்கைகள் இதையிட்டு விசனம் காட்டியுள்ளன. இதையிட்டு அரசாங்கம் அதை நிராகரித்தோ அல்லது ஆதரித்தோ எந்தக் கருத்தையும் முன்வைக்கவில்லை. அப்படியானால் அரசாங்கம் எதற்காக இதைக் கண்டும் காணாமல் விட்டுவிட்டது என்பது ஒரு கேள்வி. ஒருவேளை, அரசாங்கம் தனது தீர்வைத்தான் தானே நேரடியாகச் சொல்லாமல் அப்படிச் சொன்னால் தான் அதற்குக் கட்டுப்பட வேண்டிய வருமாகையாலும், மேலும் சிங்கள மக்களின் உணர்வுகளை சோதித்துப் பார்ப்பதற்காகவும் தொண்டமானூடாக இதை வெளியிட்டுள்ளதா என்று பலர் சந்தேகப் பட்டார்கள்.

ஆனாலும் இதை வரவேற்று சில தமிழ் கட்சிகள் அறிக்கை வெளியிட்டிருந்தன. சர்வ கட்சி மகாநாட்டில் தமிழ் கட்சிகள் சமர்ப்பித்த எட்டு அம்சத்திட்டத்திற்கும், இதற்கும், யாழ்நகரிலிருந்து வந்த டாக்டர் சிவகுமாரன் சமர்ப்பித்திருந்த தீர்வுக்கான முன்மொழிவு ஆகியவற்றிற்கிடையே அதிக அளவு வேறுபாடு இருக்கவில்லை. எனவே இவற்றை ஒரு பொதுமைப்பாடெய்திய வடிவத்திற்கு கொண்டுவந்து தீர்வுக்கான பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதே உசிதம்.

### தமிழ் மக்கள்.

மேலும் தீர்வு என்பது தமிழ் மக்களின் அடிப்படையான பிரச்சினைகளை தீர்க்கக் கூடியதாக அமைதல் வேண்டும். அடிப்படையான பிரச்சனைகள் மூன்று. ஒன்று பாதுகாப்பு. மற்றயது நிலம். அடுத்தது அதிகாரம். எந்த ஒரு தீர்வும் இம் மூன்று அம்சங்களுக்கும் முழுமையான பதிலை வழங்குவதாக இருக்க வேண்டும் அதற்கு என்ன பெயர் கொடுப்பது என்பது முக்கியமல்ல. அது மாகாண சபையாகவோ சுயாட்சி யாகவோ எப்படியும் இருக்கலாம்.

ஆனால் பிரச்சனைகளை அலசுவது அல்ல எப்படி அமுலாக்குவது என்ற நடைமுறை நோக்கோடு பார்ப்பதே முக்கியம். இன்றுள்ள அரசாங்கத்திற்கு அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வரக்கூடிய மூன்றில் இரண்டு வாக்குப்பலம் இல்லை. அதனால் என்ன தீர்வுக்கு உடன் பட்டாலும் எதிர்க்கட்சியில் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாது. ஆனால் ஏற்கனவே ஏற்கப்பட்டு விட்ட பதின்மூன்றாம் திருத்தசட்டமூலமான மாகாண சபைச் சட்டமூலம் ஒன்று தான் அரசாங்கத்தால் உடனடியாக அமுலாக்கக்கூடியது. எனவே இச் சட்டமூலத்திற்கூடாக இம்மூன்று அடிப்படை பிரச்சனைகட்குமான தீர்வுகளை தேடுவது விவேகமானது. இல்லாது போனால் பேசு மட்டும் பேசிவிட்டு பாராளுமன்றத்திற்கு போகும் போது கைவிரிக்கப்படுமானால் பேசியதில் அர்த்தமில்லாது போய் விடும். அப்படியில்லாவிட்டால் அரசாங்கத்தை மட்டுமல்ல எதிர்க்ட்சிகளையயும் தமிழ்க் கட்சிகள் ஒரு பொது உடன் பாட்டிற்கு கொண்டு வந்துதான் தமது தீர்வை சாதிக்க வேண்டும். இது முடியுமா?

### முஸ்லிம் மக்கள்.

அதே வேளை அடுத்த பிரச்சனை முஸ்லிம் மக்களுக்கான தீர்வு என்ன என்பது. எவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்கள் சிறு பான்மையினராய் உணர்கிறார்களே அவ்வாறே தமிழ் மக்கள் மத்தியில் முஸ்லிம் மக்களும் சிறுபான்மையினராய் உணர்கின்றனர். இதில் இம் மக்களின் பழைமைகள் தங்கள் உரிமைகளை ஈட்டிக் கொள்வதில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படையான கோட்பாடு ஒன்று உண்டு. அது, இது தமிழ் மக்கள் தங்களின் நீண்டகால போராட்டத்தினால் பொற்றுக்கொள்ள முற்படும் உரிமைகளை எந்த விதத்திலும் பாதிக்கக்கூடாது என்பது. இப்படி இதை எழுதுவதற்கு ஒரு காரணமுண்டு. இதுவரை அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையான இழுப்பறியாக இருந்த விடயத்தை முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்குமான இழுபறியாக மாற்றி காலம் கடத்து வதற்கும் பிரச்சனையை சிக்கலாக்குவதற்கும் ஏற்றவகையில் தற்போது விடயங்கள் கையாளப்படுகின்றன. இது தமிழர்களுக்கோ, முஸ்லிம்களுக்கோ இருவருக்குமே நல்லதல்ல. அதே வேலை முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும் பாதுகாப்பையும் அபிவிருத்தியையும் உத்தர்வாதப் படுத்தக்கூடியவகையில் இவர்களுக்கான தீர்வு அமைதல் வேண்டும்.

### அரசாங்கம்.

இது இருக்க அரசாங்கம் இப்போது தனக்கு இம்மக்களின் தேவை என்ன என்பது இன்னும் புரியவில்லை என்று பாசாங்கு செய்வதில் அர்த்மில்லை. தீர்க்கான பல முன்மொழிவைகள் பலதரப்பாலும் வைக்கப் பட்டுள்ளன. எனவே தான் என்ன தீர்வை வழங்கப்போகிறது என்பதை அது அறிவிக்கவேண்டும். அரசாங்கம் தனது தீர்வை முன் வைக்காத வகையில் இப் பிரச்சனைககு முற்று ஏதும் ஏற்படப் போவதில்லை. அரசு எல்.ரீ.ரீ.ஈ யுடனான யுத்தத்தில் ஒரு முடிவு கண்ட பின்னாள் தான் இப்படி ஒரு தீர்வை அறிவிக்க நினைத்திருக்கிறதா என்பது சந்தேகம். அப்படியாலும் ஒரு இராணுவத்தீர்வு ஒன்றன் பின்னால்தான் அரசியல் தீர்வுக்கு அரசு முன்வருமா? அது கூறும் பேச்சு வார்த்தை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு என்ற கோட்பாடுகள் என்னாகப் போகிறது? ஒரு வேளை ஒரு இராணுவத் தீர்வும் பின்னால் தமிழ் மக்கள் பலவீனமாகப் போய்விடுவார்கள், அப்போதுதான் கொடுக்கும் தீர்வு எதுவோ அதை எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டு போய் விடுவார்கள் என்பது மனக்கிடையாக இருக்கலாம். பசியால் அழுகின்ற குழந்தைக்கு வெறும் சூப்பியை வாயில் வைத்தால் சிறிது நேரம் உமிழ்ந்து பார்க்கலாம். ஆனால் விரைவிலேயே அதை தூக்கி எறிந்து விட்டு பாலுக்காக மீண்டும் கத்தும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கி சுழல்வதில்லை என்று யாரோ சொன்னார்கள். ஆனால் நாமோ வரலாற்றின் முன்னைய காலங்களிற்கு விரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

# யாழ் நகர வாழ்வு

இன்னும் பரீட்சியமான காற்று, கொதிக்கும் வெய்யில். மழை. மழை மண்ணில் கிளப்பும் அதே வாடை. செருப்புக் கால்கள் வாசலில் தட்டும்போது உதிர்க்கும் மண்துகள்கள் இன்னும் மாறிவிடவில்லை. நாம் அதே நிலத்தில் இன்னும் இருக்கிறோம்.

ஆனாலும் எங்கோ ஒரு விவசாயி துலாமிதித்துக் கொண்டு பாடும் பாட்டை இப்போது நாம் கேட்பதில்லை. துல்லியமாய் ஒரு அமைதிப் பொழுதை ஊடறுத்து எழுகின்ற கோயில் நாதம் கூட தன்பாட்டிற்கு அடித்து ஓய்ந்து போய் விடும்வரை எவரது கவனத்தையும் ஈர்பதாய் இல்லை. திருமண வீடும், மகப்பேறும், பருவச் சடங்கு சலித்துப் போய் விட்டது. அழுகை என்பது அலுத்துப்போய் விட்டது. ஒப்பாரிகளை நாங்கள் இப்போது பாடமாக்கி ஒப்பித்து விடுகிறோம். ஏதோ ஒன்று இன்னும் குறைகிறது. எம்மில் இருந்து ஒரு நரம்பு உருவப்பட்டு விட்டது.

கசோரைனா பீச்சும், கீரிமலையும் எப்போதோ எம்மிடம் விடைபெற்றுக் கொண்டன. இப்போது நீங்கள் எம்முடன் உலாவ வந்தால் நாங்கள் சைக்கிளில் போகும் பாதை நெடுக இடிந்த சுவர்களை உங்களுக்குக் காட்டுவோம். பழய நாகரீகத்தின் பெருமை தேடுகின்ற புதை பொருள் ஆய்வாளர்கள் யாரும் உங்களில் இருந்தால் இந்த இடிபாடுகளின் நடுவே எம் புதிய நாகரீகத்தில் ஏதும் மீதம் இருக்குமா எனத் தேடச் சொல்வோம். மழைநீரில் இன்னும் கரைந்தும் கரையாத கரித்துண்டு வாசகங்கள் ஒருவேளை எஞ்சியிருக்கலாம்.

மூச்சுக் காற்றைத் தவிர எதுவுமே எமக்கு மறுக்கப்பட்டு விட்டதனால் இப்போது நாம் கற்களைத் தட்டிப் பொறியுண்டாக்கும் பண்டைய காலத்துத் தேடலுக்குப் போய் விட்டோம். பனம்பழத்தில் குளிக்கிறோம். சாம்பலில் தோய்கிறோம். சைக்கிள் சில்லைச் சுற்றி டயனமோவில் வானொலிச் செய்தி கேட்கிறோம். பஞ்சுத் துண்டுடன் ஒரு துளி எண்ணெய்யில் விளக்கேற்றிக்கொள்கிறோம். வரலாற்றுச் சக்கரம் பின்னோக்கிச் சூழல்வதில்லை என்று யாரோ சொன்னார்கள். ஆனால் நாமோ வரலாற்றின் முன்னைய காலங்களுக்கு விரட்டப்பட்டுக் கொண்டு இருக்கிறோம்.

கிணறு வெட்டப்போய் பூதம் வந்ததென்று சொல்வார்கள். அது என்மோ தெரியாது. ஆனால் நாம் மட்டும் இப்போ கிணத்துக்குள்தான் வாழ்கிறோம். எமது உலகம் ஒரு சிறிய வட்டம். எங்கள் கோஷங்கள்தான் இடிமுழக்கம். எதிரொலிக்கும் ஒவ்வொரு தடவையும் உலகம் முழுக்க அதிர்வதாய் உணர்வோம். இன்னும் நாங்கள் கிணற்றுத் தவளைகள். தவளை இனத்தைத் தவிர உலகில் சிறந்த இனம் ஏதும் இல்லை என்பது மட்டும் எமக்குத் திண்ணம். நாங்கள் நால்வர் சந்திக்க நேர்ந்தால் கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த குடியென பெருமை சொல்லி ஒருவருக்கொருவர் முடி சூட்டிக் கொள்வோம். நீரில் மட்டும் நிழலைப் பார்த்தால் மீண்டும் நாங்கள் தவளையாய்த் தெரிவோம். எப்போதாவது தப்பிக்க நினைத்து தத்திப்பாய எத்தனிப்பதுண்டு. ஈரடி பாய்ந்தால் ஓரடி சறுக்கும். மறுபடி பாய மனமின்றி மீண்டும் நாங்கள் கிணத்துக்குள் குதிப்போம்.

வெளியே வசிக்கும் எல்லோருக்கும் நாங்கள் ஒரு விந்தையாய்த் தெரியலாம். ஒரு சிலர் எம்மைச் சந்திக்க நேர்ந்தால் எப்படி உங்களால் வாழ முடிகிறது என்று மட்டும் வியந்து கேட்பர். மண்புழு கூட அங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசிக்கிறது. வாழ்க்கை பற்றிய உத்தரவாதம் யாரும் அதற்குக் கொடுத்தது இல்லை. மண்ணைத் தோண்டி மண்ணைப் புசித்து மண்ணைக் கழித்து அதுவும் வாழுது. நாமும் வாழ்கிறோம்.

யாரையும் நாங்கள் நொந்து கொள்வதில்லை. விதியைப் பற்றி கவலை கொள்வதில்லை. நாட்கள் நகர்வது எமக்குத் தெரிவதும் இல்லை. எமக்கு இருபத்திநான்கு மணித்தியாலங்கள் தேவை இல்லை. இரண்டு மட்டும் போதும். ஒன்று பகல், மற்றது இரவு. ஒன்றை துரத்திக் கொண்டு பொழுதை அவையும் பதித்துச் செல்லும்.

எங்களுக்கு எப்போதாவது கப்பலில் உணவுவரும். அதைக்கொண்டு எம்மை நீங்கள் அகதிகளென்று கருதிவிட வேண்டாம். தப்பு நாம் கைதிகள். திறந்த சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்ட யுத்தத்தின் கைதிகள். சட்டம் யார் இயற்றிய தென்பதையும் அறியோம். குற்றம் என்னவென்பதையும் அறியோம். ஒருவேளை சுந்தர மூர்த்தி நாயனார் சிவனுக்கு அடிமை ஓலை எழுதிவைத்தது போல் நாமும் முற்பிறப்பில் யாருக்கும் எழுதிக் கொடுத்தோமோ என்னவோ?

> நாம் திறந்த சிறைச்சாலையில் அடைந்து வைக்கப்பட்ட யுத்தத்தின் கைதிகள். சட்டம் யார் இயற்றியது என்பதையும் அறியோம். குற்றம் என்ன என்பதையும் அறியோம்.

எம்மைப்பார்த்து ஏளனம் செய்யும் ஒருவர் "அக்கா அக்கா என்று நீ அழைத்தாய், அக்கா வந்து கொடுக்க சுக்கா மிளகா சுதந்தரம் கிளியே" எனப் பாரதி தாசனின் பாட்டொன்றைக் காட்டலாம். ஆனாலும் பார்ப்பதெது கேட்பதெது பேசுவதெது வெனக் கட்டளை இட்டு நீர் சுதந்திரம் பற்றி எமக்குச் சொல்லித்தர வந்தால் சுக்குக்கும் மிழகுக்கும் சுதந்திரத்திற்கும் வித்தியாசம் ஏதும் விளங்குமா என்ன?

ஆனாலும் யுத்த மேகங்கள் கருக்கட்டும் போது நாங்கள் எப்படிப் பதுங்குவது எனப் பயின்று கொண்டுள்ளோம். ஒரு தட்டில் உணவும் சுடுதண்ணிப் போத்தலில் தேனீரும் கொண்டு யுத்த விமானத்தை அண்ணார்ந்து பார்த்தபடி பங்கருக்குள் நாங்கள் எப்போதும் தயார்நிலையில். அல்லோல கல்லோலம் ஓய்ந்த பிறகு மந்தையிலிருந்து பிரிந்து போன ஆடுகள் தொகையை எண்ணிக் கணக்கெடுப்போம்.

வாழ்வு எமக்குள் பாகுபாட்டை விதித்திருந்தாலும் மரணம் அப்படி வேறுபாடு காட்டுவதில்லை. ஒருநாள் ஒரு ஆசிரியர் மறு நாள் ஒரு வயோதிபப் பெண், இன்னொரு நாள் ஒரு டாக்டர். மழை காலம்தான் இன்னும் சோதனையான காலம். பாருங்கள் அழிந்துவிடும். எங்கள் மரணங்கள் இப்போது சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்படும்.

ஆனாலும் மரணம் எமக்கு வேதனையானது அல்ல. வேதனையானது எதுவென்றால் வாழ்க்கைதான். என் உடலில் தேவை, என் அறிவின் தேவை, என் உணர்வின் தேவை என்னில் தங்கியுள்ளவர்களின் தேவை, என் சமூகத்தின தேவை, இவை எல்லாவற்றிற்கும் மரணம் ஒரு இலகுவான பதிலை வழங்கிவிடும். நாளைய கேள்விகளை முற்றுப்புள்ளியாக்கிவிடும். ஆனால் வாழ்க்கையோ இவையெல்லாவற்றிற்கும் பதில் சொல்லியாகப் பணிக்கப்பட்டுள்ளது.

திக்கு முக்காடுபவர்கள் வெளியேறி விட நினைப்பது சிரமம். வருடக் கணக்காகச் சேமித்துச் சேமித்துச் சிறுகச் சிறுகக் கட்டிய வீடு அவர்களுக்கு இப்போதெல்லாம் விற்க முடியாதது. ஒரு குண்டின் மூலம் எப்போதும் அழிந்து போய்விடக் கூடுமானாலும் அதைப் போராட்டத்திற்கென்று அத்தனை சுலபமாக உவந்தளிக்கச் சித்தமில்லை. எப்போதாவது திரும்பும் என கனவுகாணும் "நல்ல சூழ்நிலையில்" மகளைக் கரைசேர்க்க அதுதான் ஒரு சீதனச் சொத்து. போராட்டத்தில் பங்கு பற்றினாலும் விட்டாலும் போரினுள் வாழ வேண்டியது கடமை என்பதை மறந்து யார்தான் வெளியேற அனுமதி கேட்கத் துணிவது? போராட்டத்தைத் தனித்து விட்டுவிட்டு தாங்கள் மட்டும் தப்பிக்க நினைத்தால் யார்த்தான் ஒப்புக் கொள்வார்கள்? ஆனால் வாழ்வதற்காகப் போராடுகிறோமா போராடுவதற்காக வாழ்கிறோமா என்பதுதான் எமக்குப் புரியவில்லை.

இதன் வாழ்க்கை மிகக் கடுமையானது. ஆனாலும் பழகிப்போனது. பழகிப்போனதால் புளித்துப் போனது. புளித்துப்போனதால் உணர்ச்சிகள் மரத்துப்போனது. மரத்துப் போன பின்னால் விழுமியங்களும் பண்பாடும் உயரக்கட்டிய கோபுர உச்சியும் எப்படிப் போனாலென்ன என்பதில் அக்கறையேதுமில்லை. அக்கறையில்லாது விட்டப்பட்ட கட்டடிடம் புதர் மண்டும், புத்தெடுக்கும், ஒட்டறைச் சிலந்திவலை முழுவதும் மூடிப்படரும். எங்கள் மனங்களினுள்ளும் சிலந்தி வலை. வலை மூடிய மனதைத் துடைத்துத் துப்பரவாக்கும் துடைப்பங்கட்டை சிந்தனை தானே. அதுதான் சிறைப்பட்டுப் போனதே! கலையென்பது ஒரு சமூகத்தின் நிலைக்கண்ணாடியென்று சொல்வர். ஆனால் சமூகம் நிலை குலையும் போது உடைந்த கண்ணாடியில் விம்பம் உருச்சிதைந்துதானே தெரியும். விரக்தியும் மனவிகாரமும் உணர்ச்சியற்ற சடத்துவமும் அடுத்தவர் பற்றி அக்கையில்லாச் சுயநலமும் அகங்காரமும் அற்ப அடிவருடித் தனமும் மூர்க்கமும் வெறியும் புகைமண்டிய பொறாமையும் அன்பு பண்பு கருணை கழிவிரக்கும் அறிவு தெளிவு அனைத்தையும் மூடிப் பூஞ்சணம் போலப் பீடித்துக் கொள்ளுமோ? கிடுகுவேலிக்கு மேலால் மிளகாய் பரிமாறிக் கொள்ளும் கிராமத்து உறவுகள் இனிமேலும் எஞ்சுமோ? நாளைய சமுதாயத்தைப் படைக்க வேண்டிய பிஞ்சு முகங்களின் மனவார்ப்புகள் எப்படி அமையுமோ? இவைபற்றி நாம் சிந்திப்பதுமில்லை.

இடியோசை கேட்டால் ஒருதிக்கில் ஓடும் மந்தைக் கூட்டத்திற்குச் சொந்தபுத்தி இருப்பதில்லை. மலை உச்சிக்கு வந்த ஒன்று பள்ளத்துள் வீழ்ந்தால் மற்றதும் வீழும். சாகும். மிஞ்சியவை இன்னோர் முளக்கத்திற்கு இன்னொரு திக்கில். நாங்கள் இப்போது எந்தத் திக்கில்? மூன்று திக்கும் கடலால் சூழ கழுத்துப் புறத்தை ஆமி திருக சுற்றிச் சுற்றி எங்கே ஓடுவோம்? யாழ் இசைத்துப் பாணன் பெற்றதாம் யாழ்ப்பாணத் திருநாடு. இன்று போரிசைக்கிறது. புதுவாழ்வு பெறுமோ இல்லை சுடுகாடாய்ப் போய் விடுமோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலமாற்றம்



ஜூடாஸின் ஓவியத்தை வரைவதற்கு மாதிரியாக வைத்துக் கொள்ள இவன் பொருத்தமான ஆள் என்று அந்த ஓவியனுக்குத் தோன்றிற்று.

அவனை அழைத்து சம்மதம் கேட்டான். வறுமையில் வாடிய அவன் வருமானம் கிடைக்கும் எனத் தெரிந்தவுடன் தயக்கமின்றி சம்மதம் அளித்தான்.

அவனை முன் மாதிரியாகக் கொண்டு ஜூடாஸின் ஓவியத்தை வரைந்து முடித்த ஓவியன் அவனுக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையும் கொடுத்து விட்டு, தற்செயலாக, "நீ எந்த ஊர் என்று வினவினான்.
அவன் ஊரைச் சொன்ன போது ஓவியனுக்கு அது ஆச்சரியத்தை அளித்தது.

குழந்தை இயேசுநாதரை வரைய மாதிரியாகத் தேர்ந்தெடுத்த குழந்தையின் ஊர் எதுவோ அதே ஊரைச் சேர்ந்தவனாக இவனும் இருந்தான்.

அந்த மனிதன் தன்னுடைய பெயரைச் சொன்ன போது ஓவியனின் தலை சுற்றத் தொடங்கியது. அந்தக் குழந்தையின் பெயரையே இவனும் கொண்டிருந்தான்.

இத்தாலியில் வாழ்ந்த மிகப் பெரிய ஓவியன் அவன். அவன் வரைந்த ஓவியங்கள் சாகா வரம் பெற்றவை. கிரேக்கப் புராணத்தில் இருந்து உலகத்தின் எத்தனையோ தத்துவக் கதைகளுக்கு அற்புதமான ஓவியங்களைத் தீட்டி அழியாத புகழைப் பெற்றவன் அவன்.

இயேசு பிரானின் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவமாக கருதப்படும் பல நிகழ்ச்சிகளையும் ஓவியங்களாகத் தீட்டினான் அவன்.

கன்னி மேரி யேசுநாதரைக் குழந்தையாகக் கையில் ஏந்தி இருக்கும் காட்சியை ஓவியம் தீட்ட அவன் எவ்வளவோ சிரமம் எடுத்துக் கொண்டான்.

நிஜ மனிதர்களை மாதிரியாக வைத்து தெய்வீக ஓவியங்களைத் தீட்டுவது அவனுக்குப் பழக்கம்.

இயேசுநாதரின் தெய்வீகக் களை பொருந்திய குழந்தை ஒன்றைக் கண்டுபிடித்து அந்தக் குழந்தையை மாதிரியாக வைத்து, இயேசுநாதரின் குழந்தைப் பிராயத்து ஓவியத்தை தீட்டுவதற்காக, பொருத்தமான குழந்தையைத் தேடி ஊர் ஊராகச் சுற்றினான்; நாடு நாடாக அலைந்தான்.

இயேசுநாதரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பல்வேறு ஓவியங்களும் சிறப்பாக அமைந்து விட்டன. அவருடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்ட பல்வேறு பாத்திரங்களுக்கும் ஏற்ற மனிதர்களைக் கண்டு பிடித்து ஓவியங்களை சிறப்பாகத் தீட்டி விட்டான்.

இயேசு நாதரை காட்டிக் கொடுத்த ஜூடாஸை வரைவதற்குப் பொருத்தமான மாதிரி மனிதரை பல ஆண்டுகள் அவன் தேடி அலைந்தும் திருப்தியான ஒருவரை அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

மனம் தளர்ந்த நிலையில் அந்த ஓவியன் எங்கோ அலைந்து கொண்டிருந்த போது கொடுமையும் வஞ்சகமும் ஒருசேர நிழலாடிய தோற்றம் உடைய மனிதன் ஒருவனை அந்த ஓவியன் தற்செயலாகச் சந்தித்தான்.

சில ஆண்டுகளுக்குப் பின் அவன் விரும்பியபடியே ஒரு குழந்தையும் கிடைத்தது. அதை ஒரு சிறிய கிராமத்தில் கண்டுபிடித்தான். அந்தக் குழந்தையை ஆதாரமாக வைத்த இயேசு நாதரின் குழந்தைப் பிராய ஓவியத்தையும் தீட்டி முடித்தான்.

அந்த மனிதன் தன்னுடைய மேலங்கியை திறந்து காட்டிய போது ஓவியனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை.

இயேசுநாதரின் குழந்தைப் பருவ ஓவியத்துக்காக பயன்படுத்திய குழந்தைக்குப் பரிசளிக்கப்பட்ட சிலுவை பொறிக்கப்பட்ட தங்கச் சங்கிலி இவனுடைய கழுத்தில் இருந்தது.

அந்த மனிதன் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"குழந்தையாக இருந்த போது இயேசு பிரானைப் போல் நானும் கள்ளம் கபடமற்றவனாக இருந்தேன். வாழ்க்கைப் போராட்டம் என்னைத தீயவனாக்கி ஜூடாஸின் முகச்சாயலை எனக்குக் கொடுத்துவிட்டது."

இயேசு பிரானைப் போல் பிறக்கின்றவர்கள், சமூகத்தில் நிலவிடும் போக்குகளால் ஜூடாஸ்களாக மாறி விடுகிறார்கள் என்கிற தத்துவத்தைப் புரிந்து கொண்ட நிலையில், ஓவியன் தன்னுடைய ஓவியங்களை மறுபடியும் கண்ணோட்டமிட்ட போது

புரியாத பல வாழ்க்கை உண்மைகள் அவனுக்குப் புரியத் தொடங்கியன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"1917ம் ஆண்டு ருஷ்ஷியப்புரட்சியின் வெற்றியின் போது வெள்ள மெனத் திரண்டு பேரானந்தம் கொண்டாடிய மக்களா இன்று ஏழு தசாப்தங்களின் பின்பு அந்த ஆட்சியைத் தூற்றியபடி மாற்றத்தை கோரி கோஷமிருகின்றனர்."

# சோவியத் யூனியனில் ஏன் இந்த மாற்றங்கள்?

மாகாளி பராசக்தி உருஷிய நாட்டினிற்
கடைக்கண் வைத்தாள், \- அங்கே
ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி;
கோடுங்கோலன் அலறி வீழ்ந்தான்;
வாகான தோள்புடைத்தார் வானமரர்;
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமற் கண்புகைந்து மடிந்தனவாம்;
வையகத்தீர்,, புதுமை காணீர்!

..........................................................

..........................................................

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமைநீதி
கடி யொன்றி வெழுந்தது பார்; குடியரசென்று
உலகறியக் கூறிவிட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர் போலே கலி வீழ்ந்தான்,
கிருதயுகம் எழுக மாதோ!

\- பாரதி -

எங்கே ஒரு ரஷ்ஷிய நாட்டில் நடந்த புரட்சிக்கு எங்கோ ஒரு எட்டயபுரத்தில் பிறந்த இந்தக் கவிஞன் பாரதி "ஆகா வென் றெழுந்தது பார்" என்று வியந்து பாடினான். அவன் அதை ருஷ்ஷியப் புரட்சி என்று சொல்லவில்லை யுகப்புரட்சி யென்றே சொல்லிவிட்டான். இந்த ஆனந்தத்தில் அவன் "கிருதயுகம் எழுக மாதோ! என்று உலகை நோக்கி அறைகூவினான். ஆனால் இன்று அதே நாட்டின் நிகழும் நிகழ்வுகளைக் கண்டால் இப்போது எப்படிப் பாடியிருப்பான்?"கண்ணீர் விட்டு வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைச் கருகத்திருவுளமோ" என்பானோ?

### அங்கே சோவியத் யூனியனில்;

"எமது மண்ணில் நடத்திப் பார்க்கப்பட்ட இந்தப் பரிசோதனை எமது மக்களுக்கு ஒரு துன்பகரமான அனுபவம்" - ரஷ்சியக் குடியரசின் ஜனாதிபதி யெல்ட்சின்.

"அந்த அமைப்பு தோல்வி அடைந்து விட்டது, இது எமது நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல எல்லா நாட்டு மக்களுக்குமே ஒரு பாடமாகும்" - சோவியத் ஜனாதிபதி மிகைல் கொர்பசேவ் இவர்கள் எதைப் பற்றிச் சொல்கிறார்கள்? சந்தேகமில்லை சோசலிச அமைப்பைத்தான்.

அப்படியானால் உலகம் முழுக்க அவர்களைச் சார்ந்திருந்த கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு இவர்கள் சொல்வெதன்ன? எல்லா நாடுகளுக்கும் "ஸ்கொலர்ஷிப்" கொடுத்துக் கூப்பிட்டு மாணவர்களுக்குப் போதித்து வந்த பாடத்தை விட புதியபாடமாக எதைத்தான் அவர் குறிப்பிடுகிறார்? ஆனால் நாமறிந்த சோவியத் வெளியீடுகளிலே; அங்கே வேலையில்லாத் திண்டாட்டமில்லை, பணவீக்கமில்லை, விலையேற்றமில்லை, ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு இல்லை, அரசாங்கம் சகல மக்களதும் சகல தேவைகளையும் கவனிக்கிறது, என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசகங்களையே திரும்பத்; திரும்பக் கண்டோம். ஆனால் இன்றைய தலைவர்கள் சொல்லும் வார்த்தைகள் மட்டுமல்ல வீதிக்கு வந்த மக்களின் ஆவேசக் குரல்களும், எல்லாம் வெறும் பொய்ப் பிரச்சாரம் தானா என்ற ஐயத்தை கிளப்பியுள்ளன. ஏனெனில் அவர்கள் புரட்டித் தள்ளும் சிலைகள் உலகை உலுப்பிய புதிய கருத்துக்களைச் சிந்திய மாமனிதர்களின் உருவங்களைத் தாங்கியவையாகக் கூட இருந்தன. 1917ம் ஆண்டு ருஷ்ஷியப் புரட்சியின் வெற்றியின் போது வெள்ளமெனத் திரண்டு பேரானந்தங் கொண்டாடிய மக்களா இன்று 7 தசாப்தங்களின் பின் அந்த ஆட்சியைத் தூற்றியபடியே மாற்றத்தைக் கோரிக் கோஷமிடுகின்றனர்?

இந்தக் கேள்விகளின் மறுபுறத்தில் வெற்றியடைந்த விளையாட்டு வீரர்போல உற்சாக மிகுதியால் துள்ளிக் குதிப்பவர்கள் முதலாலித்துவப் பொருளாதார வாதிகள் தான். அவர்கள் சோவியத் யூனியனைத் தம் கைகளால் சுட்டிக்காட்டி "அந்தோ சோஷலிசம் பொய்த்து விட்டது" என்று எக்காள மிடுகிறார்கள். பின்னர் ஓடிச் சென்று சோவியத் தலைவர்கள் சிந்தும் வார்த்தைகளை தட்டத்தில் ஏந்தி அதில் தமக்குப் பிடித்தமானவற்றை உயரே தூக்கி "இதோ பாருங்கள் இவரே சொல்லிவிட்டார் "என்று காண்பிக்கிறார்கள். அத்துடன் "நான் கூட முன்னொரு போது சந்தைப் பொருளாதாரமே சிறந்த வழியென்று பூடகமாகக் குறிப்பிட்டிருந்தேன் ......." என்று சொல்லிக் கொண்டு வெளிவரும் புதிய சோவியத் பொருளாதார நிபுணர்களுடன் கைகுலுக்கிக் கொள்கிறார்கள்.

நல்லது நாம் இந்த விடயத்தை சற்று நிதானமாக பார்க்க வேண்டும். ஏனெனில் இது அதிசயமாக இன்று ஏற்பட்ட திடீர் மாற்றமல்ல. நீண்ட காலமாக உள்ளே திரண்டு வந்த முரண்பாடுகளின் வெளிப்பாடுதான் இது. இந்த முரண்பாடுகளின் உட்கிடையை ஆராய்வதென்றால் சற்று நிதானம் தேவைதான். இல்லாது போனால் அது, இது அல்லது அது என்று இரண்டில் ஒன்றின் பக்கம் மட்டும் சார்ந்து மற்றையதை முற்றாகப் புறக்கணிக்கும் அவசரத் தவறைச் செய்யவே வழிசெய்யும்.

முதலில் நாம் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். பொதுவுடமைக் கொள்கையின் மூலவர்களான மார்க்ஸ்சோ ஏங்கல்சோ அல்லது அதை நடைமுறைப்படுத்திய லெனினோ முன்னர் ஒருபோதும் ஒரு சோசலிச அல்லது பொதுவுடமை சமூகத்தில் வாழ்ந்த அனுபவம் கொண்டவர்கள் அல்ல. அவர்கள் நாம் வாழ்ந்த முதலாளித்துவ சமூகத்தின் சீர்க்கேடுகளைக் கண்ணுற்று அதை நிவர்த்தி செய்யும் சமூதாய அமைப்பை கற்பனை மட்டுமே செய்து பார்த்தனர். அவர்களின் ஆய்வுகள் முழுவதும் பெரும்பாலும் முதலாளித்துவ அமைப்பின் முரண்பாடுகளையே மையமாக கொண்டிருந்தனர். ஆனால் சேஷலிஷ அல்லது பொதுவுடமை அமைப்பில் என்னென்ன முரண்பாடுகள் எழும் என்ற ஆழ்ந்த ஆய்வு அவர்களிடம் இருக்கவில்லை. அதை நாம் அவர்களிடம் எதிர்ப்பார்க்கவும் முடியாது. அப்பணியை செய்யவேண்டியவர்கள் பின்னால் வந்தவர்களே. "இதுவரைகாலமும் தத்துவங்களால் வெறுமனே உலகை வியாக்கியானம் செய்யவே முடிந்தது. ஆனால் அதை மாற்றுவது எப்படி என்பதுதான் இப்போது எமது தேவை." இப்படிக் கூறிய மார்க்ஸ் உலகை மாற்றுவதற்காக முன்வைத்த கொள்கைதான். பொதுவுடமைக் கொள்கை.



"அந்த அமைப்பு தோல்வி அடைந்து விட்டது. இது எமது நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல எல்லா நாட்டு மக்களுக்குமே ஒரு பாடமாகும்." - கோர்பச் சேவ்.

"எமது மண்ணில் நடத்திப் பார்க்கப்பட்ட இந்தப் பரிசோதனை எமது மக்களிற்கு ஒரு துன்பகரமான அனுபவம்" - யெல்ட்சின்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



“உலகின் யுத்த சமனிலையைப் பேணுவதற்காக முதலாளித்துவ நாடுகளிற்கு ஈடாக சோவியத் யூனியனும் ஆயுத உற்பத்தியில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதில் நாட்டின் மொத்த வருமானத்தின் கணிசமான தொகையை செலவிட நேர்ந்தது.”




சுரண்டலின் அத்திவாரம் உற்பத்திச் சாதனங்களின் தனியுடைமைதான் என உணர்ந்த அவர் அவை பொதுவுடமையாக்கப் பட வேண்டும் என்றார். இந்தக் கொள்கை பெற்றெடுத்த முதலாவது குழந்தைதான் சோவியத் யூனியன்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தை விமர்சித்து எழுந்த சோசலிசப் பொருளாதாரம் தான் சிறந்ததென வாதிட்டது. பணவீக்கம், வேலையில்லாத் திண்டாட்டம், தேக்கம் போன்றவற்றை முதலாளித்துவத்தின் தவிர்க்கவொணா நெருக்கடிகள் எனச் சாடியது. மேலும் முதலாளித்துவத்தின் தாறுமாறான உற்பத்திக்குப்பதில் தனது திட்டமிட்ட உற்பத்தி சிறந்ததென்றும் மூலப்பொருட்களின் விரயத்தை தவிர்த்து கச்சிதமான பாவனையை உறுதிப்படுத்துமென்றும், உற்பத்தி லாபத்தை நோக்கமாகக் கொள்ளாது தேவையை நோக்கமாகக் கொண்டிருக்குமென்றும் வாதிட்டது.

இப்படிக் கூறிக்கொண்ட போதும் இன்று சோவியத் யூனியன் 74 ஆண்டுகளின் பின்னும் பெருமளவு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி மேற்கத்தய நாடுகளின் நிதியுதவி கோரி யாசிக்கும் நிலைக்கு எப்படி வந்தது?

இப்போது நாம் சோவியத் யூனியனின் நெருக்கடிகளுக்கு காரணம் அறிய விளைவோமாயின் எவ்வளவு தூரம் அதை நாம் பூரணமாக விளங்கிக் கொள்ள முடியுமென்பது கேள்வியாகவுள்ளது. ஏனெனில் எமக்கு இன்னும் பல தரவுகள், உண்மைகள் தெரிய வரவேண்டியிருக்கிறது. எனினும் எமக்குத் தெரிந்த விடயங்களை வைத்துக்கொண்டு இதை நாம் பார்த்தால் இதற்கு இரண்டு வகையான காரணிகளை நாம் காணலாம். ஒன்று அகக்காரணிகள். மற்யது புறக்காரணிகள். அகக் காரணிகள் என்பதை சோவியத் யூனியனின் ஆட்சியின் தவறுகளின் விளைவுகளென்றும், புறக்காரணிகளென்பதை ஆட்சியை சாராத, புறத்திலிருந்து ஏற்பட்ட ஏனைய தாக்கங்களென்றும் வகுத்துக் கொள்ளலாம்.

மார்க்ஸ் ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாட்டில்தான்புரட்சி முதலில் வெடிக்குமென எண்ணினார். அப்படி அவர் ஐரோப்பாவிலிருந்தே புரட்சியை எதிர்பார்த்தார். ஏனெனில் முதலாளித்துவத்தின் உச்சக்கட்டத்தில் தான் சோசலிசம் பிறக்குமெனக் கருதினார். அவர் உற்பத்திச் செயற்பாட்டின் வளர்ச்சியோடு ஏற்படும் சமுதாய அமைப்புகளின் மாற்றத்தில் முதலாளித்துவத்திலும் உயர்ந்த ஒரு படிநிலையாகவே சோசலிசத்தைக் கருதினார். அத்தோடு புரட்சியின் செலுத்துகருவியாக அவர்கருதிய போர்குணம் கொண்ட பாட்டாளி வர்க்கத்தை தோற்றுவிப்பதும் முதலாளித்துவமே என்பதால் அவர் முதலாளித்தும் தனது சவக்குழியை தானே தோண்டுகிறது என்றார். ஆனால் அவ் வெதிர்பார்ப்புக்கு மாறாக புரட்சி ஒரு நிலப்புரபுத்துவ நாடான ரஷ்யாவில் தான் முதலில்வெடித்தது. இதனால் இங்கு தோன்றிய சோசலிசம் மார்க்ஸ் எதிர்பார்த்தது போல் உயர்ந்த உற்பத்திப் பொறிமுறையோடு கூடியதாய் இருக்கவில்லை. எனவே முதலாளித்துவம் செய்திருக்கும் என எதிர்பார்த்த பணியை சோசலிசம் தானே அதையும் செய்ய வேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தது. அதனால் அது பாரிய தொழில் மயமாக்கல் நடவடிக்கைகளில் துரிதமாக இறங்க வேண்டி இருந்தது. இதை அவசரமாக செய்யும்போது பெரும்பான்மையான விவசாயிகளை தொழிற்துறையை நோக்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இழுத்துவர நேரிட்டது. அது ஒரு பல வந்தமான முயற்சியாக அமைந்ததில் அரசுக்கும் மக்களுக்குமிடையான புதிய முரண்பாடுகள் தோன்ற வழியமைத்தது. இதன்போது ஸ்ராலின் காலத்தில் இழைத்த அரசியற் தவறுகள் இன்னும் ஆராயப்பட்டு வருகின்றன.

அதே வேளை உலகில் தோன்றிய இந்தப் புதிய சோசலிச அரசு சுதந்திரமாகச் செயற்படக் கூடியவாறு உலக நிலைமை இருக்கவில்லை. "கம்யூனிச அபாயம்" என்று முதலாளித்துவத்தால் கிளப்பப்பட்ட பீதி இதர நாடுகளின் ஒத்துழைப்பை இழக்கச் செய்ததுடன் பொருளாதாரத் தடைகளினால் தனிப்படுத்தப்பட்டிருந்தது. யுத்த அச்சுறுத்தல்களால் சூழப்பட்டிருந்தது. இவற்றின் நடுவே தன்னை தற்காத்துக் கொள்ள வேண்டியிருந்தது.

இதற்கு மேலாக அது இரண்டாம் உலக மாகாயுத்தத்தில் ஹிட்டலரின் முற்றுகைக்குள்ளாகி பெரும் பொருட்சேதத்திற்கும் உயிற்சேதத்திற்கும் (36 லட்சம் கொம்யூனிஸ்ட்டுகள் உயிரிழந்தனர்.) உள்ளானது. இறுதியில் ஹிட்லரை முறியடித்த போதும் இவ் யுத்தத்தின் சுமையை அது தாங்கிக்கொள்ள நேரிட்டது.

அத்துடன் உலகின் இதர புரட்சிகளுக்கும் அது உதவி செய்ய வேண்டியிருந்தது. மேலும் புரட்சி வெற்றியீட்டிய நாடுகளுக்கு பொருளாதார உதவிகள் செய்ய வேண்டியிருந்தது. வர்த்தகத் தடைவிதிப்புகளுக்கு உள்ளான அந்நாடுகளின் உற்பத்திப் பொருட்களை கூடுதல் விலைகொடுத்து தானே வாங்கி அவற்றைக் காப்பாற்ற வேண்டியிருந்தது. அல்லது பண்டமாற்று பொருட்களை கொடுத்துதவ வேண்டியிருந்தது. இதற்காக தனது தங்கங்களை விற்கத் தள்ளப்பட்டது.

முதலாளித்துவ அரசாங்கங்களால் உலகெங்கும் செய்யப்பட்ட சோசலிச எதிர்ப்புப் பிரச்சாரங்களுக்கு ஈடுகொடுத்து பாரிய அளவில் சித்தாந்த பிரச்சாரத்தை மேற்கொள்ள நேர்ந்தது.

இவற்றைவிட உலகின் யுத்த சமநிலையை பேணுவதற்காக முதலாளித்துவ நாடுகளுக்கு ஈடாக தானும் ஆயுத உற்பத்தியில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டது. இதில் நாட்டின் மொத்த வருமானத்தின் கணிசமான தொகையை செலவிட நேர்ந்தது.

இந்தக் காரணிகளைப் புறக்கணித்து விட்டு இதன் வீழ்ச்சிக்கான நெருக்கடிகளை சாதாரண சூழலில் எழுந்தவையென்ற கற்பனையில் நோக்க முடியாது. அத்துடன் இப்படியான சூழ்நிலைகள் மத்தியிலும் அது ஈட்டிய வெற்றிகளையும் நாம் புறக்கணித்து விட முடியாது.

பின்தங்கிய ஒரு நிலைப்பிரபுத்துவ நாடாக இருந்த ரஷ்ஷியாவை தனித்து நின்று இத்தனைக்கும் மத்தியில் உலகின் முன்னேறிய நாடுகள் வரிசையில் நிறுத்தியதுமில்லாமல் வல்லரசுகளில் ஒன்று என்ற நிலையையும் எய்த வைத்தமை அதன் சாதனைதான். அதன் விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் கணக்கெடுக்கெடுத்துப் பார்க்கப் படவேண்டியவை.

இருந்த போதிலும் இன்று அங்குள்ள நிலைமை இரும்புத் திரை அகற்றப்பட்ட நிலையில் உலகுக்கு அப்பட்டமாகத் தென்படுகிறது. அங்கு



*"சோவியத் யூனியன் 2ம் உலக மகாயுத்தத்தில் பெரும் பொருட் சேதத்திற்கும் உயிர்ச் சேதத்திற்கும் உள்ளானது."*

*"புரட்சி வெற்றியீட்டிய நாடுகளிற்கு பொருளாதார உதவிகள் செய்ய வேண்டி இருந்தது. வர்த்தக தடை விதிப்புகளுக்குள்ளான அந்நாடுகளின் உற்பத்திப் பொருட்களை கூடுதல் விலைகொடுத்து வாங்க வேண்டி இருந்தது".*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்பட்ட பிரச்சனைகளின் ஆதி மூலம் பொருளாதார நெருக்கடியே என்பது யாவருக்கும் தெரிந்த விடயம். அதை அதன் தலைவர்கள் கூசாமல் சொல்லி உதவி கோரி பிச்சாபாத்திரம் ஏந்துகின்றனர். "மிகவும் அவசரமான பிரச்சனை இப்போது உணவுப்பிரச்சனை தான்" என்கிறார் கோர்பசோவ். ஆனாலும் இப் பொருளாதார நெருக்கடி ஒரு திடீர் விளைவல்ல. இப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் வெறும் பொருளாதாரக் காரணங்களுமல்ல. அதே வேளை இந்த நெருக்கடி வெறும் பொருளாதாரக் கொள்கைகள் மீது மட்டும்தான் தாக்கம் செலுத்தி விட்டுப் போவவையும் அல்ல. சோவியத் யூனியனில் என்ன நடந்தது என அதன் இன்னொரு பக்கத்தையும் நாம் சற்றுப் பார்ப்போம்.

பொருளாதாரப் புறத்தை எடுத்துப் பார்ப்போமானால் எழுபதுகளின் முற்பகுதியை விட அதன் பின்னய காலங்களில் தேசிய உற்பத்தி தொடர்ச்சியாக குறைந்து வந்துள்ளது. அவை திட்டமிட்ட உற்பத்தியைவிட மிகவும் குறைவானவையாகவே இருந்தது.

விவசாயத் துறையில் தானிய அறுவடை குறைவடைந்து இறக்குமதி அதிகரித்தது. இறைச்சி உற்பத்தி அதிகரிக்கவில்லை. பால் உற்பத்தி வீழ்சி கண்டது. தொழிற்துறையில் ஐம்பதுவீதத்திற்குக் கூடிய தொழில் பிரிவுகள் குறிப்பாக கனரகதொழிற்துறை தேக்கநிலையை அல்லது பின்னடைவு நிலையை எய்தியது. முடிக்கப்படாத கட்டட வேலைகளின் அதிகரிப்பு எழுபதுகளின் முற்பகுதியின் நிலைமையை விட மோசமானதாக இருந்தது.

என்ன காரணம் என்றுபார்த்தால் விவசாயத்தில் 97% விளைநிலத்தைக் கொண்டிருந்த தேசிய பண்ணைகளும், கூட்டுறவுப் பண்ணைகளும் முதலீட்டு நிதி, யந்திரங்கள், பசளைகள் போன்வற்றை அரசிடமிருந்து பெற்றும் மொத்த உற்பத்தியில் 80%மே உற்பத்தி செய்யும் போது 3% மட்டுமே கொண்டிருந்த தனியார் பண்ணைகள் 20% தை செய்தன. தொழிற்துறையில் எழுந்த பிரச்சனைகளுக்கு போதிய முதலீட்டு இன்மை, உழைப்புத் தட்டுப்பாடு ஆகியவைக் காரணங்கள் என சொல்லப்பட்டது. உழைப்பின் உற்பத்தித் திறன் குறையத் தொடங்கியது. இதன் காரணம் முக்கியமாக முறை சாரா பொருளாதாரம் (INFORMAL ECONOMY) உருவாகி இருந்ததாகும். இதை விட இயந்திர சாதனங்களின் குறைந்த பாவனையும் தொழிலாளர் வர்க்கம் வேலையைத் துரிதமாக்குவதற்கு எதிர்ப்புக் காட்டியமையும் மேலும் காரணிகளாகும். தொழிலாளர்கள் வேலைத் தலங்களை விடுத்து சட்ட விரோதமான செல்வம் தரக்கூடிய "சிறு தொழில்களை"ச் செய்ய விலகிச் சென்றனர். இது வேலைக்குச் செல்லாத தன்மை (ABSENTEEISM) வளர்வதற்கு காரணமாகும். இவை சேமிப்பு வங்கியின் வைப்புத் தொகையின் வருடாந்த வளர்ச்சி வீதம் குறைந்து செல்ல வழிகோலின. அத்துடன் மூலப் பொருட்கள் விரயமாக்கப்பட்டன. இதைவிட மிகவும் முக்கியமான காரணம் இராணுவப் பொருட்களை உற்பத்திச் செய்வதில் கூடிய கவனம் செலுத்தி பெருமளவு நிதியையும் தொழில்நுட்பத்தையும் அதன் பக்கம் திருப்பியதால் இதர பொருளாதார துறைகள் குறிப்பாக எலக்ரோனிக்ஸ், நுண்இயந்திரவியல் (PRECISION ENGINEETRING) போன்றவை தொழிற் நுட்பத்தில் பின்தங்கின. மேலும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் 1975 பின் பெருமளவு முன்னேற்றம் ஏற்படவில்லை. கணிசமான அளவு முன்னேறியிருந்த சமூக நலப்பகுதி (WELFARE SECTOR) பின்னர் தரம் குறைந்து போய்யுள்ளது. கட்சியால் நியமிக்கப்பட்ட குறிப்பிட்ட சில அரசாங்க பிரமுகர்களுக்கு (NOMENKLATURA எனப்படுபவர்களுக்கு) மட்டும் பிரதியேகமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மருத்துவமனைகளில் இன ரீதியான வார்டுகள் அமைந்திருந்தன. அதி நவீன அலகுகள் இப் பிரமுகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. பொது மக்களுக்கு கிடைக்காத எல்லா வெளிநாட்டுப் பொருட்களையும் பெறக் கூடிய கடைகள் இவர்களுக்காக மட்டும் அமைக்கப்பட்டிருந்தன. மதுபான பாவனை திரும்பவும் மோசமடையத் தொடங்கியது. சீரழிவுக்கு அறிகுறியாக தெரிந்தது. கலாச்சாரத்தின் மேற்குலக மோகம் பரவியது வெளிநாட்டு கொள்கைகள் மாற்றமடைந்தன. இவ்வகையான நிலைகளில் வளர்ச்சி ஆட்சியின் ஸ்திரத்தன்மை மீது கேள்வி எழும்பியது. கருத்து வேறுபாடு உடையவர்கள் மீது அடக்குமுறைகள் எழுந்தன.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது மக்களின் வெறுப்புக்கான காரணத்தை உணர்ந்து கொள்ள முடியும் ஆனால் மக்களின் பிரச்சனைகளுக்கெல்லாம் ஏகாதிபத்தியங்களின் கைவரிசை என்ற பூச்சாண்டி காட்டி ஆட்சியாளர்கள் சமாளித்து வந்தனர். அனால் அவர்கள் மக்களுக்கு மறுக்கப்பட்ட பல சலுகைகளை தாம் அனுபவித்து வந்தனர். தங்கள் செயற்பாட்டிற்கு சோசலிசத்தின் பெயரால் தத்துவ விளக்கம் கொடுத்தனர். அரசியல் அதிகாரம் உழைக்கும் மக்களின் நலன்களைப் பேணுவதற்கு பதிலாக ஒரு குறிப்பிட்ட அதிகார அடுக்கைச் சேர்ந்தவர்களின் நலன்களைப் பேணுவதாய் இருந்தது. அதனால் உற்பத்தியில் உழைப்பாளிகள் ஈடுபாடு காட்டவில்லை. அத்துடன் அரசியல் உணர்வு மங்கிப் போனது. என்ன உற்பத்தி செய்யப்பட வேண்டும், எவ்வளவு உற்பத்தி செய்யப்படவேண்டும் என்ற அடிப்படைக் கேள்விகள் மக்களின் நலனிலிருந்து தீர்மானிக்கப் படவில்லை. மிக வேகமாக முன்னேறி உலகில் பல அதிசயங்களை நிகழ்த்திக் காட்டிய சோவியத் யூனியன் பின்னால் ஏன் இப்படி படுமோமான நிலைக்குத் தள்ளப்பட்டுப் போனது என்பதன் சூட்சுமம் இதில் தான் அடங்கியுள்ளது.

மார்க்ஸ் கூறிய சோசலிசப் பொருளாதாரம் என்பது மிகவும் உயர்ந்த உற்பத்திச் செயற்பாட்டைக் கொண்ட ஒரு பொருளாதாரமே. அவர் முதலாளித்துவம் செய்யத்தவறிய சீரான வினியோகத்தை சோசலிசம் செய்வதனூடாக உழைக்கும் மக்களுக்கு உழைப்பின் பயன் சென்றைடவதை உறுதிப்படுத்தினார். பதிலாக அவர் இது போன்ற வினைத்திறன் அற்ற ஊழல் நிரம்பிய வினியோகத்தில் பாகுபாடு கொண்டமந்தப் பொருளாதாரத்தை சோசலிசப் பொருளாதாரமாகக் கருதியிருக்க வில்லை.

அதேபோல் லெனின் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்றபோது பாட்டாளிவர்க்க அரசு ஒடுக்கும் வர்க்கங்கள் மீது கைக் கொள்ளும் சர்வாதிகாரெமன்று அர்த்தம் கண்டாரேயன்றி ஒரு அதிகாரக் கூட்டம் தமது சுகபோகங்களை நிலைநிறுத்திக் கொள்வதற்காக பொதுமக்கள் மீது மேற்கொள்ளும் சர்வாதிகாரமாக கருதியிருக்கவில்லை.

எனவே இத்தகைய அரசும் அதன் பொருளாதாரமும் மாற்றியமைக்கப் படவேண்டியெதன்பது நீண்டகாலமாக வளர்ச்சியடைந்து இன்று உச்சக் கட்டத்தை எய்தியிருக்கும் நெருக்கடிகளின் தவிர்க்க முடியாத விளைவு எமது விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நெருக்கடிகள் உச்சக்கட்ட நிலையை எய்திய போது பதவிக்கு வந்த கோர்பச்சேவ் இதை உணர்ந்திருந்தார். எனவே தான் இந் நெருக்கடி நிலையை சற்றுத் தளர்த்தும் நோக்கத்தோடு தனது "பெரிஸ் ரொய்க்கா" சீர்திருத்தத்தை முன்வைத்திருந்தார். பனிப்போரை நிறுத்தி இராணுவப் பொருட்களை நோக்கி மையப்படுத்தப் பட்டிருந்த உற்பத்தியை மக்களின் அத்தியாவசிய தேவைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்கானதாக மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து ஆயுதப் பரிகரண முயற்சிகளில் அக்கறை காட்டினார். ஆனால் அவர் வெள்ளம் வந்த பின்னர்தான் வாய்க்கால் வெட்ட முற்பட்டார். ஆனால் வெள்ளமோ அணையையே உடைத்துக் கொண்டு பாய்ந்து விட்டது.

> "பின் தங்கிய நிலப்பிரபுத்துவ நாடான ரஷ்ஷியாவை தனித்து நின்று இத்தனைக்கும் மத்தியில் உலகின் முன்னேறிய நாடுகளின் வரிசையில் நிறுத்தியதுமல்லாமல், வல்லரசுகளில் ஒன்று என்ற நிலையும் எய்த வைத்தமை அதன் சாதனைதான். அதன் விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றங்கள் கணக்கெடுத்துப் பார்க்கப் பட வேண்டியவை."

கோர்பச்சேவ் திறந்து விட்ட வாயிலினூடாக பீறி எழுந்தவை மக்களின் அதிருப்தியின் வெளிப்பாடுகளே. "உங்கள் சோசலிசத்தால் எங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாவிட்டால் எங்களிடம் விட்டு விடுங்கள். நாங்களே எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறோம்". இதுதான் இப்போது அவர்களின் குரல். அவர்கள் மீண்டும் தனியுடமைக்குச் செல்வதுதான் தங்கள் விமோசனத்திற்கு வழியென நம்புகிறார்கள். முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார உதவிபற்றிய ஆசை வார்த்தைகள் இவர்களின் ஆதங்கத்தை இன்னும் தூண்டுவனவாய் இருக்கின்றன. ஆனால் இத்தனை காலமும் உலகின் சோசலிசப் புரட்சிகளுக்குத் தலைமை வகித்த ஒரு நாட்டின் மக்கள் இன்று முற்றுமுழுதாக சோசலிசத்தைப் புறக்கணித்து விட்டார்களா என்பது எல்லோரையும் ஆச்சரியத்திலாழ்த்தும் கேள்வியாக உள்ளது. சில அவதானிகள் கூறுகிறார்கள் இது இதுவரை கால நெருக்கடிகளின் பிடிக்குள் சிக்கியிருந்த மக்கள் விடுபட்ட போது எழுகின்ற ஆவேசத்தின் வெளிப்பாடுகள் இவை. இதை அனைத்து மக்களதும் நிதானமான கருத்தாக எடுக்க முடியாது. மக்களின் பெரும்பாலானோர்க்கு இனி என்ன நடக்குமோ வென்ற அச்சம் தான் நிலவுகிறது. அதி தீவிரமான மாற்றங்கள் "சட்டியிலிருந்து குதிக்கப்போய் அடுப்புக்குள் விழுவதாகப்" போய் விடுமா என்பதுதான் அவர்களின் அச்சம்.



ஆனாலும் சோவியத் யூனியனில் மாற்றங்கள் இப்போது ஏற்பட்டு விட்டன. இதற்காக சோவியத் யூனியன் கொடுத்துள்ள விலை மிகப் பெரியது. அது தான் ஒரு வல்லரசு என்ற நிலையிலிருந்து இறங்கிவர நேர்ந்தது. சில குடியரசுகளுக்கு கூடிய சுதந்திரம் வளங்க வேண்டியிருந்தது.

> "இப்போது நாங்கள் எமக்கு ஒரு சந்தைப் பொருளாதாரம் தான் தேவை என்ற முடிவிற்கு வந்து விட்டோம்."

"இப்போது நாங்கள் எமக்கு ஒரு சந்தைப் பொருளாதாரம் தான் தேவை என்ற பொது முடிவுக்கு வந்து விட்டோம்" சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் இப்படிக் கூறுகிறார். எனினும் இந்த மாற்றங்களின் பின்னாலும் ஒரு கேள்வி இருக்கத்தான் செய்கிறது. இந்த மாற்றங்கள் மக்களின் உண்மையான தேவைகளை நிறைவேற்றுதற்காகச் செய்யப் படுகிறதா அல்லது வெளிநாட்டுப் பொருளாதார உதவிகளை வளங்குவதற்கு அந் நாடுகள் விதித்திருக்கும் முன் நிபந்தனைகளை திருப்தி செய்வதற்காகச் செய்யப் படுகிறதா? பின்னையது தான் பிரதானமான காரணமாக இருப்பின் இம்மாற்றங்கள் மக்களை விட வெளிநாடுகளுக்குத்தான் கூடுதல் சேவை செய்வதாய் அமைந்து விடக் கூடும். ●

> உங்கள் சோசலிசத்தால் எங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாவிட்டால் எங்களிடம் விட்டு விடுங்கள் நாங்களே எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பூமியிலே.......

கைலாசத்தில் நிஷ்டையயிலிருந்த சிவபெருமானை "சிவனே நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்ற ஈனமான வேண்டுகோள் ஒன்று காதில் வந்து மோதி மோதி குழப்பிய படி இருந்தது. இறுதியில் சிவன் இது என்ன குரல்? என்று அருகிலிருந்த சீடர்களிடம் வினவினார். "இலங்கையிலிருந்து ஒரு தமிழன், சுவாமி" சீடர்கள் பதில் சொல்லினர். சிவனின் முகம் தாமரை போல் மலர்ந்தது. " ஆகா, பூலோகத்தில் எனது நாமத்தை இன்றும் உச்சரிக்கிறார்களா? பார்த்தாயா பார்வதி மனிதர்கள் என்னை மறந்து விட்டதாக நையாண்டி செய்வாயே? "உமாதேவியை ஒரு பெருமிதத்துடன் பார்த்துவிட்டு சிவன் மீண்டும் கேட்டார்" ஆனால் எப்படி இவ்வளவு காலமும் ஒருவரின் குரலும் இத்தனை தூரம் வரமுடியாதிருக்க இவன் குரல் மட்டும் வந்து சோந்தது ?"

"இவன் கடும் தவம் புரிகிறான் சுவாமி"

"கேள் உமாதேவி. கேள் எங்கே என் பக்தனின் தவச் சிறப்பை இந்த ஞான சூனியத்துக்கு எடுத்துச் சொல்லுங்கள் சீடர்களே" சிவன் எல்லையற்ற ஆனந்தத்தில் மிதந்தார்

சீடர்கள் சொல்வாராயினர்.

"ஐயனே, அவன்
வெய்யிலைக் கண்டானில்லை
கொட்டும் மழையினைக் கண்டானில்லை"
பசியினைக் கண்டானில்லை சொட்டுத்தண்ணீரும் கொண்டானில்லை.
பொருட்களைக் கடந்து நோக்கும்
பார்வையில் குறிக்கோளில்லை.
படிகளில் ஏறி இறங்கும்
கால்களில் களைப்புமில்லை
உற்றதோர் சிந்தையாகி
உயிருருகும் உமது பக்தன்
மற்றுறொன்றும் வேண்டாமென்று
"விசா" வொன்றே வேண்டி நிற்பன்."

"ஆகா, அற்புதம்.! எத்தனை காலமாயிற்று இப்படியோர் தவத்தைக் கேட்டு. ஆமாம் அது என்ன "விசா"?

"எமக்கும் அது புரியவில்லை சுவாமி."
"எப்படியோ ஆகட்டும்.நான் அவனைச் சென்று பார்க்கிறேன். அது சரி இத்தகைய ஒரு தவத்தை ஏன் எனக்கு நீங்கள் முன் கூட்டியே சொல்லவில்லை" அவன் தவமிருக்கும் இடம் அத்தனை புனிதமானதில்லைசுவாமி "எங்கே?"

"அது ஒரு ஏஜென்சி வாசற்படி" மூடர்களே தவம் செய்வதென்றால் மலை ஏறவேண்டும், கும்பிடுவதென்றால் கோவிலுக்குப் போக வேண்டும் என்ற காலம் போய்விட்டது. இப்போ கத்தரிக்காய் நறுக்கிக் கொண்டும் கடவுளைக் கும்பிடலாம். தெரிந்ததா? சரி எனக்கு இங்கு வேலையில்லை. எங்கே என் பக்தனோ அங்கேதான் நான். பார்வதி எனக்கு விடைதருவாயாக.

"நாதா ஒரு சிறு விண்ணப்பம்" உமையவள் சற்றுத் தயங்கினாள்.

"என்ன, விரைந்து சொல்"

"தாங்கள் மிக நீண்ட காலத்தின் பின் பூலோகம் போகிறீர்கள். அவர்களின் பாஷை தங்களுக்குப் புரியாதிருக்கும். தாங்கள் இசைந்தால் நான் ஒரு புதிய அகராதி தந்து விடுகிறேன்."

"என்ன சொன்னாய் தட்சாயினி உன் அரக்க சுபாவம் மீண்டும் தலை தூக்குகிறதா? புரிந்தது புரியாதது தெரிந்தது தெரியாதது பிறந்தது, பிறவாதது அனைத்து மறிவோம். சங்கம் வளர்த்த தமிழ், நான் நின்று வாதுரைத்த நக்கீரன் தமிழ், எனக்குப் புரியாதென்று நீயுரைக்க வந்தாயோ?"

"பொறுத்தருள வேண்டும் நாதரே. அங்கே இப்போது சங்கம் இல்லை. இருப்பது இயக்கம். தங்களுக்கு டம்பிங் தெரியுமா. மண்டையில போடுவது, தட்டுவது மற்றெருபுறம் ஹெல்மட்டில் போவது, போடர் தாண்டுவது......... ஏதாவது பொருள் புரிகிறதா சுவாமி. தாங்கள் அவர்களின் சொற்களுக்கு தவறாக அர்த்தம் கொண்டு விடுவீர்களோ என அஞ்சுகிறேன்.

"ஏய் மாயக்காரி நீ குளப்புகிறாய்." "சீடர்கள் முன் என்னை அவமதிக்கிறாய்"

"இல்லை சுவாமி! தாங்கள் கண்களை மூடி இல்லாததை அறிய விளைந்தீர்கள். நானோ கண்களைத் திறந்து கொண்டு இருப்பதை அறிந்து கொண்டேன். அவ்வளவுதான்."

"போதும் உன் உபேதசம். நான் என் பக்தனை இனியும் காக்கவைப்பதற்கில்லை. சென்றுவருகிறேன்."



"உற்றதோர் சிந்தையாகி உயிர் உருகும் உமது பக்தன் மற்றொன்றும் வேண்டாமென்று விசாவொன்றே வேண்டி நிற்பன்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சிவனே நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்." ஒன்றரை வருஷமா இந்த ஏஜென்சிக் காறனுக்கு காசைக் கட்டிவிட்டு இராப்பகலா அலையிறன். ஒன்று இரண்டல்ல மூன்றரை லட்சம். இன்றைக்காவது விசா கிடைச்சிடவேணும்." ஏஜென்சியின் படியேறிக் கொண்டே அவன் இப்படி வேண்டிக் கொண்டான்.

"ஐயா உங்கட அலுவலாத்தான் வெளியில போயிருக்கிறார். உங்களை வேற அலுவல் ஏதுமிருந்தால் செய்து கொண்டு கொஞ்சம் சுணங்கி வரட்டுமாம்" அங்கிருந்த பையன் பாடமாக்கினாற் போல் சொன்னான். "இல்லை நான் அவர் வரும்வரை இங்கேயே இருக்கிறன்." அவன் விறாந்தையில் போட்டிருந்த பெஞ் சில் இருந்து கொண்டான். அவன் மனமோ "கடவுளே இன்றைக்காவது விசா கிடைத்து விட வேண்டும்" என்று மீண்டும் பிரார்த்தித்தபடி இருந்தது. அப்போது யாரோ தான் இருந்த பெஞ்சில் வந்து இருப்பதாக உணர்ந்தான். திரும்பிப் பார்த்தான். அங்கே சடையுடன் கூடிய ஒருவர் புலித்தோலை இடையில் கட்டியபடி அவனைப் பார்த்து ஒரு விதமாக புன்முறுவல் பூத்தபடி இருந்தார்.

இது யார் .... புலித் தோல்? ஓ இது இப்ப புது யூனிபோமோ? அவனுக்குத் "திக்" கென்றிருந்தது. அவன் நெஞ்சுக்குத்துக்கு வைத்தியம் பார்க்க கொழும்பு செல்வதாக பொய் சொல்லித் தான் பாஸ் எடுத்தவன். இப்ப யாரோ வெளிநாட்டுக்குப் போக நிற்பதாக இன்பமேஷன் கொடுத்திருக்கிறார்கள் போலும், பொறாமைக்காரர்கள்.

அவன் பதறியபடி எழும்பி நின்றான். "அண்ணை. நான் வெளிநாட்டுக்குப் போகயில்லேயண்ணை. யாரோ போய் .... நான் சத்தியமா ... நாட்டுப்பற்று .. தியாகம் .... போராட்டம் .... அண்ணை .... அண்ணை மன்னிச்சுடுங்கோ அண்ணை......

காலைப் பிடிக்கப் போகும் போது சிவன் எழுந்து தடுத்தார். ஆ! என்னே பக்தி. என்னே பக்தி! அவன் கூறியது என்னவென்று அவருக்குப் புரியவில்லை. ஆனால் அன்பென்றால் என்ன வென்பதை கண்ணப்ப நாயனாரிடம் கண்டவரல்லவா அவர். பக்தன் பரவசத்தில் ஏதோ செய்கிறான். மீண்டும் அவசரப்பட்டுக் கண்ணைக் கிண்ணை குத்திக் கொண்டு விடுவானோ என்ற பயம் அவருக்கு. பதற்றத்தில் "நில்லு கண்ணப்ப நில்லு!" என்றவர் பின்னர் தன் ஆள்மாறாட்டத் தவறை உணர்ந்தபடி எழுந்திரு பக்தா எழுந்திரு! என்று அவனை எழுப்பிவிட்டார்.

"என்ன பக்தா வா? அப்படியானால் இது யார்?" சற்று மனதை ஆசுவாசப்படுத்திக் கொண்டு ஏற இறங்கப் பார்த்தான் அவன். தலையில் சடை கையில் கமண்டலம். ஓ! இது ஒரு துறவியாக இருக்கவேண்டும். பாவம் என்னைப் போல் ஏஜென்சிக் காசை கட்டிவிட்டு அலைந்து காசு முழுவதும் கரைந்து இப்படித் துறவியாகிவிட்டார் போலும், என எண்ணமிட்டபடி கேட்டான்;

"ஐயா நீங்கள் எவ்வளவு காலமாக இந்த ஏஜென்சிக்கு அலைகிறீங்கள்."

"நான் முன்னர் ஒருபோதும் வந்ததில்லை பக்தா. தற்போதுதான் வந்துள்ளேன்."

அப்போ இவர் எனக்குப் போட்டியாக வந்துவிட்டாரோ?

ஐயா உமக்கு இரக்கமிருந்தால், நான் விசா எடுத்துக்கொண்டு போய்விடுகிறன். அதற்குப் பிறகு வந்து அவரைச் சந்தியும் ஐயா. ஒன்றரை வருஷம் ஐயா."

"பக்தா நான் வேறுயாரையும் காண வரவில்லை உன்னைத்தான் காண வந்தேன்."

"அவனுக்கு மீண்டும் சந்தேகம் எழுந்தது." ஏனையா வயித்தக் கலக்க வைக்கிறீர். நீர் யார் எங்கயிருந்து வாறீர் என்று சொல்லித் தொலையுமனய்யா."

"நான் கைலாசத்திலிருந்து வருகின்றேன் பக்தா."

"அங்கெல்லாமிருந்து ஏனய்யா இங்க வாறீங்கள். வேற ஏஜென்சி ஒன்றுமே கிடைக்கேல்லையா?"

"பக்தா மீண்டும் சொல்கிறேன் நான் உன்னையே காணவந்தேன்"

"ஏன் ... ஏன்... ஏன் ?"

"நீ அழைத்தாய் ..."

"நானா ....?"

"ஆமாம் சற்று முன்னரும் அழைத்தாய்?"

அடக் கடவுளே! இது என்ன மதுரைக்கு வந்த சோதனை?

"இதோ இப்போது சொன்னாயே?"

"என்ன அடக் கடவுளே என்றா?

ஆமாம் அதே கடவுள் தான் நான்." சிவன் கம்பீரமாக நின்றார்.

"ஐயா நீர் கடவுளா? ... சிறிது கணம் யோசித்தான் பின்னர் சொன்னான் "ஆமாம் விசா கிடைத்தால் ஐம்பது தேங்காய் உடைப்பதாக நேர்த்திக்கடன் வைத்திருந்தனான் தான். ஆனால் அது போய்ச் சேர்ந்த பின்னாலல்லவோ? நீர் என்ன அதற்கு முதலே வந்து நிற்கிறீர். வட்டிக் கடைக்காரனை விட மோசமையா நீர்!

சிவன் வாய்விட்டுச் சிரித்தார். சிரித்து முடித்ததும் பின்னர் அமைதியாகச் சொன்னார் "பக்தா நான் தேங்காய் எதுவும் உன்னிடமிருந்து பெற்றுச் செல்ல வரவில்லை முன்னரும் ஒரு மாங்காயால் தான் என் மைந்தர்களிடையே பிரச்சினை தோன்றியது. அப்படியிருக்க இப்போ நான் தேங்காயை கொண்டு செல்வேனா? மக்களோ என்னை வெறும் பூக்களால் பூஜிக்கிறார்கள். ஆனால் நான் தேடுவதோ அன்பு ஒன்றுதான்.

"அப்படி ஒரு பூ நான் கேள்விப்பட்டதேயில்லையே. எங்கே இருக்கிறதென்று சொல்லும். பூ தானே அதிகம் விலைவராது. வாங்கித் தந்துவிடுகிறேன்."

"பக்தா அது நிலத்தில் பூப்பதில்லை. மனத்தில்தான் பூக்கிறது."

"ஐயா, நீர் இப்படி வந்து இல்லாததைக் கொண்டுவா வென்றால் நான் எங்க போறது? என்னை விட்டுடுமையா. எல்லாம் ஒரு விசாவுக்காக நேர்த்திக்கடன் வைக்கப் போய் வந்த வினை. விசாவும் வரவில்லை. நீரும் வந்து தொல்லை தாறீர். நான் சொன்னேனா அன்பு கின்பு எல்லாம் தாறனென்று? ஐம்பது தேங்காய். அது தான் பேச்சு. காரியம் முடிய முன்னமே வந்திட்டீர். சரி பரவாயில்லை வாங்கித் தாறன் பேசாமல் கொண்டுபோச் சேரும். (மனதுக்குள் ... தண்டம், தண்டம் ....)

சிவனுக்கு பக்தன் ஏன் இப்படிச் சீறுகிறானென்று புரியவில்லை. ஆனால் அவன் ஏதோ விசா வென்று சொன்னது காதில் விழுந்தது. எனவே சிவன் சொன்னார் "பக்தா நீ ஏன் சினக்கிறாய் என்று புரியவே இல்லை. ஆனால் நான் வந்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உனது வேண்டுகோளுக்கு அருள் பாலிக்கத்தான்.

நீ "விசா" என்று ஏதோ வேண்டினாய். அது என்ன? புரிய வைத்தாயானால் நான் உனக்கு அருள முடியும்."

"உண்மையாவா?"

"ஐயா ஏன் நிற்கிறீர்கள். இருங்கள், இருங்கள். என்ன குடிக்கிறீர்கள் கூல் டிரிங்ஸ் அல்லது சோடா? உடனே வாங்கிவாறேன்"

"இல்லை பக்தனே எனக்கு தாகம் இல்லை. நீ சொல் விசா வென்றால் என்ன? ,

"ஆமாம் விசா .... கனடியன் விசா. கனடாவுக்கு போவதற்கு."

"போய் என்ன செய்வாய்"

"அகதியாகுவேன்"

"அகதியாகவா"

"ஆமாம்""

"அப்படி யென்றால் தாய் தந்தை உறவு பொருள் எதுவுமில்லாத ஒருவனுக்குவது என்பதல்லவா பொருள்"

"ஆமாம்"

ஓ புரிகிறது. இவன் பற்றற்றவனாகப் போகிறான். துறவு கொள்ளப் போகிறான். என்னே சிந்தனை! என்னே பக்தி! ஆ ... உமாதேவி. கேட்டாயா என் பக்தனை? மற்றவர்களெல்லாம் எனக்கு அது வேண்டும் இதுவேண்டும் என்று கேட்டு தவம் செய்கையில் இவன் எதைக் கேட்கிறான் பார்த்தாயா? இவன் எதுவுமே வேண்டாமென்று துறவு பூண வரம் கேட்கிறான். எப்படி என்பக்தன்." பின்னர் பக்தனை நோக்கி "மெச்சுகிறேன் பக்தா பொருள் நிலையற்றது. தேகம் அழிவது ஆன்மா ஒன்றே நிலையானது. இத்தனை இளவயதில் தத்துவத்தின் உட்பொருளையே புரிந்து கொண்டாயே! தொடர்ந்து சொல் பின்னர் என்ன செய்வாய்? ஏன் இவ்வளவு இளவயதில் அகதியாகிறாய்?

"அகதியானால் டோல் மணி கிடைக்கும். அத்தோடு ஒட் ஜொப்ஸ் செய்வேன்."

"அப்படியென்றால்?"

"சிறு சிறு வேலை செய்து உழைப்பது"

"ஆ நீ சிறுத் தொண்டைச் சொல்கிறாயா? ஆமாம ஆமாம் நீ சொல்வது சரி இப்போதெல்லாம் துறவிகள் துறவறம் என்று வீட்டு சும்மா குந்தியிருந்து காலம் போக்கிறார்கள். ஆனால் சிறுத் தொண்டர் நாவுக்கரசர் போல துறவறம் பூண்ட நிலையிலும் சரீரத் தொண்டு புரிதல் வேண்டும். அதுவே சரியான வழி நீ எவ்வளவுஉண்மைகளை புரிந்து கொண்டிருக்கிறாய் எனக்கு நீண்ட காலத்திற்குப் பின்னர் இப்படி ஒருவன் பேசக் கேட்க மிகுந்த சந்தோஷம் பிறக்கிறது. மேலே சொல் பக்தா.

"நான் டபிள், றிபிள் அடிப்பேன்."

"புரிய வில்லையே"

"அதாவது இரண்டுவாட்டி மூன்று வாட்டி வேலை செய்வேன்."

"பக்தா உன் பக்தியை மெச்சுகிறேன். ஆனால் உனது அளவு மீறிய பக்தியால் விசுவாமித்திர் போல முடியை திரியாக்கி எரிப்பது என்று அதி தீவிரமாகப் போய் விடுவாயோ என அஞ்சுகிறேன்."

"அப்படி உழைத்தால் தான் கடன்களை விரைவில் அடைக்க முடியும்"


"கடனா? துறவு பூண்ட பின்னும் கடனா?

"ஆமாம் முன்பு பெற்ற கடன் ஏஜென்சிக்கு காசு கட்ட வாங்கிய கடன், காணி ஈடுவைத்த கடன்."

"சிவன் சற்றுச் சிந்தித்தார். சிந்தனை முடிவில் அவரது புருவம் வியப்பால் உயர்ந்தது. கண்களில் ஒளி பளிச்சிட்டது."

"ஆகா அற்புதமான கருத்து. அந்தோ! இதுவரை இல்லறத்திற்கும் துறவறத்திற்கு மிடையில் இருந்த முரண்பாடு ஒழிந்தது. ஏய் அறிவால் அமுந்திக் குள்ளமாய் போன அகஸ்தியனே! உன் வேதாகமங்களில் இல்லாத தர்மத்தை இம்மானிடன் இயம்பக் கேட்டாயா? ஒருக் வேதம் தந்த விஸ்வாமித்திரா! நீ நாட்டை விட்டு ஓடி வந்து தவம் செய்த போது புலப்படாத தர்மத்தை சின்னஞ் சிறு இளைஞன் எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டான் பார்த்தாயா?

ஆமாம் பக்தனே ஆமாம். துறவம் பூண்டால் இல்லறத்தின் கடன்களை




"இதுயார் ...... புலித்தோல்?

ஓ. இது இப்போ புது யூனிபோமோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்படி அடைப்பது என்று எந்த வேதமுமே சொல்லவில்லை. நீ தான் எனக்கு இப்போது பூலோக தர்மத்தை எடுத்துரைத்தாய். முன்னர் எனக்கு ஓங்காரத்தின் உட்பொருள் உரைத்தான் எனது மைந்தன் முருகப் பெருமான். அன்று நான் முதற்குட்டுப் பெற்றேன். இன்று நான் மறு குட்டுப் பெறுகிறேன். ஓ பக்தா பிறவிக் கடனை அடைத்திட நீ துறவு பூண்டு தொழில் புரிவாயாக. சொல்லு மைந்தா இன்னு முன் தர்மங்கள் என்னவென்று சொல்லு........

"அடுத்து லான்டட் கிடைத்ததும் அதைக் கொண்டு ஏஜென்சி நடத்துவது".

"என்ன இது எனக்கு விளங்கவில்லை."

"அதாவது எனக்கு கிடைக்கும் அங்கத்தய விசாவைக் கொண்டு மேலும் பலரை அங்கு எடுப்பிப்பது.

"அதாவது தான் பெற்ற இன்பம் எல்லோரும் பெறவென்று ... உன் சிந்தனை உயர்ந்தது பக்தா. ஆனால் இப்படி நீ மற்றோரையும் நல்வழிப் படுத்துவதில் உன் புண்ணிய பலன்களை விரயமாக்கலாமா?

"இல்லை இப்படி செய்வதால் கிடைக்கும் பீஸைக் கொண்டு அங்கு வீடு வாங்குவேன்."

"அதாவது மற்றேரையும் நல்வழி சேர்க்கும் புண்ணியத்தால் ஈற்றில் நீ வீடுபேறெய்துவாய் என்கிறாய். ஆனால் பக்தா மானுடரின் புண்ணியத்திற்கு மேலுலகில் தான் வீடு பேறு கிடைக்கும். நீ ஏன் இங்கேயே பெற நினைக்கிறாய்? ஆனால் எனக்கு நீ கூறும் விசா என்ற பொருள் ஏதென புரியவில்லை. ஆனால் நான் உனக்கு இன்னொரு நல்லுதவி செய்ய முடியும்.

"என்ன"

"சொர்க்கத்திற்கு உன்னை அனுப்ப முடியும்.

"விசா இல்லாமலா?"

"ஆமாம் பக்தா. கூண்டோடு கைலாசம் போனோர் மிகச் சிலர்தான். விஸ்வாமித்திரர் அனுப்பிய திரிசங்குவைக் கூட அனுமதிக்கவில்லை."

"அப்படி அங்கு என்ன விஷேஷம் உள்ளது."

அங்கு நீ அறிவாளர்களையும் நீதிமான்களையும் உயர்ந்த உள்ளங் கொண்டவர்களையும் காணலாம்."



"அதாவது மற்றோரையும் நல்வழி சேர்க்கும் புண்ணியத்தால் ஈற்றில் நீ வீடு பேறு எய்துவாய் என்கிறாய்! ஆனால் பக்தா மானிடரின் புண்ணியத்திற்கு மேலுலகில்தான் வீடுபேறு கிடைக்கும். நீ ஏன் இங்கேயே பெற நினைக்கிறாய் ஆனால் எனக்கு நீ கூறும் விசா என்ற பொருள் ஏதெனப் புரியவில்லை. ஆனால் நான் உனக்கு இன்னொரு நல்ல உதவி செய்ய முடியும்.

"ஆனால் அங்கு என்னென்ன வசதிகள் உண்டு?

"அங்கு சாதாரணமான வசதிகள் தான் உண்டு பெரிதாக உயர்ந்த பொருட்கள் எதுவும் அங்கில்லை. ஆனால் அங்குதான் பரிபூரண சுகம் உண்டு."

"எப்படி? பொருட்கள் வசதிகளின்றி எப்படி சுகம் உண்டு?"

"சுவர்க்கத்திற்குப் போகின்றவர்கள் யாவரும் புண்ணியவான்கள் அவர்கள் அன்பும் பண்பும், கருணையும் தனக்கென்று வாழாத தன்மையும் மற்றோருக்கு உதவும் மனப்பாங்கும் கொண்டவர்கள். பேராசை அற்றவர்கள்.இருப்பதைக் கொண்டே திருப்தியடைபவர்கள். கடின உழைப்பாளிகள். அதனால் அவர்கள் ஒருவரோ டொருவர் அன்புடனும் பரிவுடனும் பழகிறார்கள். எல்லோரும் ஒற்றுமையாக கடுமையாக உழைத்து தமக்கு வேண்டியவற்றை உருவாக்கிக் கொள்கிறார்கள். ஓய்வு நேரங்களில் அற்புதமான கலைகளில் ஈடுபட்டு ஆடிப்பாடி மகிழ்கிறார்கள். அதனால் அங்கு நின்மதியான வாழ்வு நிலவுகிறது."

"ஆனால் அங்கு சொத்து தேட முடியாதா?"

"தேடுவாரற்றிருக்கிறது சொத்து. அதை யேன் தேடவேண்டும்?"

"ஏஜென்சி நடத்த வட்டிக்கடை நடத்த (மெதுவாக காதுக்குள்) தூள் கடத்த முடியாதா?"

" பக்தா நீ ஏதோ புதிதாக எல்லாம் சொல்கிறாய். ஆனால் அப்படியெல்லாம் அங்கில்லை"

" நல்லது கடவுளே எனக்கு உங்கள் சுவர்க்கம் சரிப்பட்டு வராது. நான் கனடாவுக்கே போகிறேன்."

சிவனுக்கு பக்தனின் முடிவை புரிந்து கொள்ள முடியவில்லை "அப்படியானால் பக்தா என்னால் உனக்கு உதவ முடியாது நான் விடை பெறுகிறேன்."

கடவுள் போய்விட்டார். இவன் இன்னும் ஏஜென்சிக் காரனின் வருகையை எதிர் நோக்கி வாசலைப் பார்த்திருக்கிறான்.

சிவன் போய் உமாதேவியிடம் சொன்னார். "காலப்போக்கில் எமது சொர்க்கத்திற்கு ஒருவரும் வர மாட்டார்கள். ஏனெனில் பூமியிலேயே ஓர் புதிய சுவர்க்கத்தை தேடி அவர்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சார்க் மாநாடு.

கடந்த 7.11.91 அன்று ஆரம்பமாக இருந்த சார்க் மகாநாடு இறுதி நேரத்தில் ஒத்திப் போடப் பட்டு விட்டது. பூட்டான் மன்னர் தன் உள்நாட்டுப் பிரச்சனை காரணமாக இறுதி நேரத்தில் கலந்துகொள்ள முடியாதென அறிவித்துவிட்டார். அதைமிட்டு நேபாளப் பிரதமரும், ஏக மனதான தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு அனைத்து நாட்டுத் தலைவர்களின் பிரசன்னமும் அவசியமென்றும் பூட்டான் மன்னர் இல்லாதவிடத்து தான் கலந்து கொள்வது பிரயோசனமற்றது என்றும் கூறி மகாநாட்டிற்கு வரவில்லை. இதேபோல் இந்தியாவும் இவை இரண்டும் வராததால் தானும் வரவில்லை. இதுதான் வெளியிடப்பட்ட காரணமாகும். எனினும் இதையிட்டு பல்வேறுபட்ட அபிப்பிராயங்கள் உலவுகின்றன.

இம் மகாநாட்டுக்குச் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் சமுகம் தருவதுபற்றி ஆரம்பம் முதலே சந்தேகங்கள் கிளப்பப் பட்டிருந்தன. ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரனை கிளப்பிவிட்ட எல்.ரீ.ரீ.ஈ இனருக்கு இந்தியாவுக் கெதிராக ஆயுதம் வழங்கியதாக குற்றம்சாட்டும் சர்ச்சை இதற்கு வித்திட்டது. இந்தியப் பத்திரிகைகள் நரசிம்மராவ் இப்படியான நிலமையில் கலந்துகொள்ளத்தான் வேண்டுமா என்ற கேள்வியை எழுப்பின. நரசிம்மராவ் இதைக் கண்டித்து அளித்ததாகக் கூறப்படும் ஒரு பத்திரிகைப் பேட்டி யொன்றும் ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகியது. பின்னர் அவர் மகாநாட்டில் கடைசி நாள் மட்டும் கலந்து கொள்வாரென்றும், முதல் நாள் ஒரு சில மணித்தியாலங்கள் மட்டுமே கலந்து கொண்டுவிட்டுத் திரும்பி விடுவாரென்றும் பல தரப்பட்டவகையில் செய்திகள் வந்தன. இவை இருக்க முன்னர் 1989ல் இலங்கையில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய மகாநாட்டை இந்தியப்படைகள் இங்கு இருக்கையில் தான் எப்படி இதை நடத்துவது என்ற ஒரு கௌரவப் பிரச்சனையை முன்வைத்து இலங்கை நடத்தாது விட்டதால் ஏற்பட்ட மனக் கசப்பும் இந்தியாவின் நடத்தையில் எதிரொலித்திருக்க நியாயமுண்டு. அத்துடன் அண்மையில் அகில இந்திய வானொலியில் இலங்கைச் செய்தி முகவர் கருப்புசாமியை நாடு கடத்தியது தொடர்பாகவும் இந்திய வெளிநாட்டு அமைச்சு வட்டாரங்களில் மனக்குமுறல் ஏற்பட்டிருந்தது.

இது நிற்க பூட்டான் மன்னர் வராமைக்கு வேறுரு கௌரவப் பிரச்சனை காரணமாய் இருக்கலாமெனவும் கருதப்படுகிறது. இலங்கை வெளிநாட்டமைச்சர் மற்றய நாடுகளுக்கு நேரடியாக அழைப்பைக் கையளித்து விட்டு, ஜனாதிபதியின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான வாக் கெடுப்புக்காக அவசரமாகத் திரும்பும்படி வந்த செய்தி காரணமாக பூட்டானுக்குச் செல்லாமல் பங்களா தேசத்திலேயே பூட்டான் தூவராலயதத்தில் தனது அழைப்பைக் கையளித்து விட்டுத் திரும்பிவிட்டதாகவும், இது அவருக்கு ஒரு கௌரவக் குறைச்சலாகப் பட்டிருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

அதே வேளை மாலைதீவில் நிகழ்ந்த கடந்த சார்க் மகாநாட்டில் இலங்கை ஜனாதிபதி கலந்து கொள்ளவில்லை. பதிலாக பிரதமர் டி.பி.விஜயதுங்க தான் கலந்து கொண்டார். அப்படியிருந்தும் மகாநாடு நடந்தது. அப்படியிருக்க இங்கு ஒரு நாட்டின் தலைவர் இல்லாவிட்டாலும் மகாநாட்டை நடத்தியிருக்கலாம் தானே. ஏன் அப்படிச் செய்யவில்லை என்ற கேள்வியை பத்திரிகைகள் எழுப்புகின்றன. ஆனால் இங்கு ஒரு நாட்டின் பிரசன்னமின்மையைக் காரணங் காட்டி மேலும் இருநாடுகள் வருகை தரவில்லை. மகாநாடு ஒத்திவைக்கப்பட்ட முடிவை எடுத்தது இது வரை தலைமை வகிக்கும் மாலைதீவுதான் இவற்றையிட்டுத்தான் இது இந்தியாவின் ஏற்பாடாக இருக்குமா என்ற சந்தேகம் கிளம்பியுள்ளது. அப்படியானால் இது இலங்கை மீது ஏதோ ஒரு அதிருப்தியை வெளிப்படுத்துமுகமான செய்தியாக இருக்கும். இருப்பினும் இவ்வகை அதிருப்திபற்றி எதுவும் வெளிப்படையாக தெரிவிக்கப்படவில்லை. இலங்கை எதிர்க்கட்சிகளைப் பொறுத்த வரையில் இலங்கை அரசாங்கத்தின் தவறான வெளியுறவுக் கொள்கையின் தோல்வியே இதற்கான காரணம் எனக் கூறுகின்றன.

இப்படியிருக்க இந்தியா, பத்திரிகைகள் தன்மீது சார்க் மகா நாட்டைக் குளப்பியதன் சூத்திரதாரி எனச் சுமத்தியிருந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளது. தான் சமுகமளிக்காதது பூட்டான் மன்னர் சமுகமளிக்காத காரணத்தை முன்னிட்டு அல்ல அது மாலைதீவு ஜனாதிபதி சார்க்மகாநாடு ஒத்திவைக்கப் பட்டுவிட்டதாக தந்த அறிவுறுத்தலை இட்டே முடிவெடுக்கப் பட்டது என்று கூறுகிறது. பூட்டான் மன்னர் எடுத்த முடிவுக்கும் தனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என்றும் தெரிவிக்கிறது.

எது எப்படியிருந்த போதும் இவ்வளவு கோடிக் கணக்கில் செலவு செய்து ஏற்பாடு செய்திருந்த இம் மகாநாடு நடைபெறாமல் போனது இலங்கைக்கு ஒரு வருத்தம் தரக்கூடிய நிகழ்வுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கைக்கு அமைதியிலும் குழப்பத்திலும் நான் நண்பனாக விழங்குவேன். - நவாஸ் ஷெரீப்.



"மகாநாடு ஒத்திப்போடப்பட்டு விட்டதென அறிந்த பின்பும் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக இங்கு வருகை தந்து வைபவங்களில் கலந்து கொண்டு சிறப்பித்தார் திருமதி. காலிதா



பூட்டான் மன்னர் எடுத்த முடிவுக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை. - இந்தியா.

இதை விட இன்னெரு புறத்தில் சார்க் நாடுகளிடையே பிளவு ஒன்று ஏற்படக் கூடுமா என்ற சந்தேகமும் தலை தூக்கி உள்ளது. இந்தியாவுக்கு பாகிஸ்தானும், பங்களாதேசும் நல்லுறவு பாராட்டக் கூடியவையாகத் தற்போது இல்லை. சார்க் மகாநாடு ஒத்திப் போடப்பட்டு விட்டது என்று அறிவித்த பின்னரும் பங்களாதேஷ் பிரதமர்திருமதி காலிதாசியா இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக இலங்கைக்கு வருகைதந்து வைபவங்களில் கலந்து கொண்டார் பாகிஸ்தான் பிரதமர் திரு. நவாஸ் ஷெரிப் இதில் கலந்து கொண்டு ஆற்றிய உரை இந்தியாவை நேரடியாகச் சாடா விட்டாலும் இம் மகாநாடு பிற்போடப்பட்டமையை இட்டு வருத்தம் தெரிவித்ததுடன் இலங்கைக்கு அமைதியிலும் குழப்பத்திலும் தான் உற்ற நண்பனாக விளங்குவேன் என்று உறுதியளிப்பதாய் இருந்தது. இது தற்போது சார் நாடுகளிடையே ஏற்பட்டுள்ள பிணக்குகள் தீர்க்கப்படாது போகும் பட்சத்தில் உருவாக்கக்கூடிய புதிய இந்திய எதிர்ப்பு முகாமில் இலங்கையையும் உள்வாங்கிக் கொள்ள மேற்கொள்ளப்படும் முன்னோடியான முயற்சி எனக் கருதவும் இடமுண்டு.

சார்க் நாடுகளின் பிணக்குகளில் இன்னொர் சர்ச்சையும் உண்டு. அது சார்க் நாடுகளுக்கான சார்க் வங்கி ஒன்றை அமைப்பது தொடர்பானது, இவ் வங்கிக்கு உலக வங்கி, IMF போன்றவற்றிடமிருந்து நிதி கோரப்பட வேண்டும் என்ற கருத்தொன்றே இங்குள்ள சர்ச்சை. அப்படிக் கோரப்படும் பட்சத்தில் அந்நிதி செலவு செய்யப்படுவது தொடர்பாக இவ் வமைப்புகள் சில சட்ட திட்டங்களையும் முன்வைக்குமென்றும், அத்துடன் அந்நிதி பயன்படுவதைக் கண்காணிக்கும் கண்காணிப்புக் குழுவொன்றை ஏற்படுத்துமென்றும் இவை காரணமாக சார்க் நாடுகள் வெளித் தலையீடுகளுக்கு ஆளாகுமென்றும் இந்தியா இக்கருத்தை விரும்பவில்லை. ஆனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்றவை விரும்புகின்றன. இந்தியாவுக்கு எதிரான சில எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இம் மகாநாட்டை ஒட்டி எழலாம் என இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் கருதியமைக்கும் இது ஒரு காரணமாகும்.

சார்க் கூட்டமைப்பானது இந்தியா பாகிஸ்தான் பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மாலைதீவு, இலங்கை ஆகிய தெற்காசிய நாடுங்கள் தம்மிடையே பொருளாதார தொழில்நுட்ப, கலாச்சார ஒத்துழைப்புக்களைப் பரிமாறிக் கொண்டு அபிவிருத்தியடையுமுகமாக ஏற்படுத்தப்பட்டது. இவை தங்கள் நிகழ்ச்சிநிரலில் இருதரப்பு விவகாரங்களை எடுப்பதில்லை என்ற பொது உடன்பாட்டிற்கு வந்திருந்தன. அது ஒரு ஆரோக்கியமான சூழ்நிலைக்கு பாதகமாக அமையுமென்பது இதன் காரணமாகும். ஆனால் தற்போதய நிகழ்வுகளை நோக்கும்போது இவ் இருதரப்பு விவகாரங்களே சார்க்கின் ஆரோக்கியத்திற்கு ஊறு விளைவிக்கும் போல் தெரிகிறது. இந்தியப்படை இலங்கையில் இருப்பதால் சார்க்கை இங்கு நடத்த முடியாது என இலங்கை 1989 ல் மறுத்தது இருதரப்பு விவகாரம் தான். தற்போது இலங்கை மகாநாட்டை இந்தியா பகிஷ்கரித்தது உண்மையாக இருந்தால் அதுவும் இலங்கை மீதான மனக்கசப்பால் எழுந்த இருதரப்பு விவகாரம்தான். பாகிஸ்தான் பிரதமர் இங்கு வந்து ஆற்றிய உரையில் காஷ்மீர் பிரச்சனையை எழுப்பியிருந்தும் இருதரப்பு விவகாரம்தான். எனவே தொடர்ந்தும் இவ் இருதரப்பு விவகாரங்கள் இங்கு எதுரொலிக்குமானால் சார்க்கின் வளர்ச்சி கேள்விக்கிடமானதாகிவிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பல் முனைப் பேட்டி.

## பேட்டியின் மையம்; இலங்கையின் இனப்பிரச்சினை.

இலங்கையின் தலை வெடிக்கும் பிரச்சினையாக உருவாகி இன்று இவ் இனப்பிரச்சினை நிற்கிறது. இது இன்று பல்வேறு பரிமாணங்களை எய்தி மிகவும் சிக்கலாகவும் கூர்மையான பிரச்சினையாகவும் மாறி விட்டது. தமிழ் மக்கள் மட்டுமல்ல முஸ்லீம் மக்களும் இப் பிரச்சனையின் கொடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகி, என்று எமக்கு இனி அமைதியும் சமாதானமும் கொண்ட வாழ்வு கிடைக்குமென்று ஏங்கிய படியிருக்கிறார்கள். தகிக்கும் இந்தக் கேள்வியில் பற்றிய நெருப்பில் எத்தனையோ மக்கள் கருகி மடிந்தும் வீடு வாசல் தொழில் கல்வி வாய்ப்புகளைப் பறிகொடுத்தும் வாழ்விழந்து போய்விட்டார்கள்.இந்த நெருப்பு இனி எண்ணெய் ஊற்றப்பட்டு இன்னும் பரவுமா, அல்லது தணியுமா? - இது இப்பிரச்சினையை கையாளு பவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது.

நாம் இங்கு செய்யப் போவது இதுதான். இந்தப் பிரச்சினையை மையமாகக் கொண்டு பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், அரசியல்வாதிகள், மற்றும் முக்கிய பிரமுகர்களைப் பேட்டிகண்டு அவற்றை வாசகப் பெருமக் களுக்கு வழங்குவது. இது பல்வேறு பட்ட கருத்துக்களையும் மக்கள் அறியச் செய்து நல்ல சிந்தனைகளை உருவாக்க உதவும் என்பது எனது ஆதங்கம்.

இவ்வகையில் நாம் லங்கா சமசமாஜக்கட்சி தலைவரான திரு. வாசுதேவ நாணயக் காராவை பேட்டி கண்டோம். அதை இம்முறை கீழே தருகிறோம்;

இதில் கூறப்படும் கருத்துக்கள் யாவும் பேட்டி வளங்குபவரின் சொந்தக் கருத்துக்களே.



### வாசுதேவ நாணயக்கார.

3.1.1933 பிறந்த இவர் தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர். அரசியலில் இவர் ஒரு தொழிற்சங்கவாதி, இடதுசாரி கொள்கையுடைய நவ சம சமாஜ கட்சியின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர். இவர் முதன் முதலாக 7வது பாராளுமன்றத்தில் கிரிகெல்ல தொகுதி இடைத்தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு 6000 அதிகபடி வாக்குகளால் அடுத்ததான யூ. என். பி. வேட்பாளரை தோற்கடித்து பாராளுமன்ற உறுப்பினரானார். தற்போதைய 9வது பாராளுமன்றத்தில் இரத்தினபுரி தேர்தல் மாவட்டத்தில் ஐக்கிய சோஷலிச முன்னணி வேட்பாளராக நின்று வெற்றியீட்டி பாராளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

இவர் முன்னர் லங்கா சம சமாஜ கட்சியின் மத்திய கமிட்டியில் இருந்தவர். 1971ம் ஆண்டு ஜே. வி. பி. கிளர்ச்சியை தொடர்ந்து இவர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்து விடுதலையாகி பின் அக் கட்சியில் இருந்து பிரிந்து நவ சம சமாஜ கட்சியை ஸ்தாபித்தார். கடந்த 1980ம் ஆண்டு ஜூலையில் அனைத்து தொழிற் சங்கங்களினதும் கூட்டான வேலை நிறுத்தத்தில் கொழும்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கைதாகி பிணையில் வெளிவந்த போதும் அவருக்கும் அவருடன் சேர்ந்தவர்களுக்கும் எதிராக கடந்த 11 வருடங்களாக நடைபெற்ற வழக்கு சமீபத்தில் தான் முடிவுற்று நிரபராதி என தீர்ப்பு கூறப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கேள்வி–** இன்று இலங்கையின் இனப் பிரச்சினையை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? சிலர் நிர்வாக பிரச்சினையாக மட்டுமே கருதுகிறார்கள். சிலர் தேசிய இனப்பிரச்சினை என்கிறார்கள். இதில் உங்கள் பார்வை என்ன?

*வாசு–* இது அடிப்படையிலேயே ஒரு தேசிய இனப்பிரச்சினை. இவ்வாறான பிரச்சினை வெவ்வேறு அளவுகளில் கிழக்காசிய நாடுகள் யாவற்றிலும் உள்ளது. இப்பிரச்சினையின் ஆரம்ப வடிவம் கல்வி, வேலை வாய்ப்புகளின் புறக்கணிப்பு, குடியேற்றம் போன்ற வகையாக இருந்தாலும் இதன் ஆணிவேர் தேசிய இனப்பிரச்சினையே! இப்போது உள்ள கேள்வி எப்படி ஒரு ஒற்றுமையை கொண்டு வருவது என்பதே! இவ் ஒற்றுமை பலாத்காரம் மூலம் அல்லாமல் சுய விருப்பத்தின் அடிப்படையில் அமைவதாக இருக்க வேண்டும். 16ம், 17ம் நூற்றாண்டுகளில் ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் எப்படி ஒரு தேசமாக உருவாயிற்று என்பதை இங்கு உதாரணமாக கொள்ளலாம்.

"இப்போது உள்ள கேள்வி எப்படி ஒரு ஒற்றுமையைக் கொண்டு வருவது என்பதே! இவ் ஒற்றுமை பலாத்காரம் மூலம் அல்லாமல் சுய விருப்பத்தின் அடிப்படையில் அமைவதாக இருக்க வேண்டும். 16ம், 17ம் நூற்றாண்டுகளில் ஜேர்மெனி, இத்தாலி போன்ற நாடுகள் எப்படி ஒரு தேசமாக உருவாயிற்று என்பதை இங்கு உதாரணமாகக் கொள்ளலாம்".

**கேள்வி–** தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினை என்னவென்று கருதுகிறீர்கள்?

*வாசு–* அடிப்படையில் இது ஒரு உணர்ச்சி ரீதியான (EMOTIONAL) பிரச்சினை. இது ஒரு பிரதேசம் தனக்கென்ற உரிமையைக் கொண்ட தேசிய இனமாக தம்மை வெளிப்படுத்த விரும்பும் மக்கள் தொகையின் உணர்ச்சி ரீதியான பிரச்சினை.



**கேள்வி–** இப்படியான பிரச்சினை தொடர்பாக உங்கள் கொள்கை என்ன?

*வாசு–* சுயநிர்ணய உரிமையை நாம் அங்கீகரிக்கிறோம். அப்படி கூறுகையில் அவைகள் பிரிந்து செல்வதையும் உள்ளடக்கிய சுயநிர்ணய உரிமையே குறிப்பிடுகிறோம். எனினும் நாம் அவர்கள் பிரிந்துதான் போக வேண்டும் என்பதற்காக வதாடமாட்டோம். கூடுமான மட்டும் ஒற்றுமையை நிலைநாட்டவே விரும்புகின்றோம்.

**கேள்வி–** அப்படியானால் என்ன வகையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று கருது கிறீர்கள்.

*வாசு–* மாகாண சபையை ஒரு ஆரம்பமாக கொள்ளலாம். இதன் கீழ் முஸ்லிம்களுக்கு ஒரு உப சபையை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களின் அபிலாசையையும் திருப்தி செய்யலாம். பின்பு இவற்றிற்கான அதிகாரங்களை விஸ்தரித்துச் செல்லலாம்.

"அடிப்படையில் இது ஒரு உணர்ச்சி ரீரியான பிரச்சினை இது ஒரு பிரதேசம் தனக்கென்ற உரிமையைக் கொண்ட, தேசிய இனமாக தம்மை வெளிப்படுத்த விரும்பும் மக்கள் தொகையின் உணர்ச்சி ரீதியான பிரச்சினை"

**கேள்வி–** ஏன் இலங்கை, இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்திய மாகாண சபைக்கான சூழலை தொடர்ந்து வளர்த்துச் செல்ல முடியாது போயிற்று?

*வாசு–* இதற்கு தற்போதைய ஜனாதிபதிதான் காரணம். அவர் வாயளவில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதாகச் சொன்னாலும் நடைமுறையில் அதற்கு எதிராகத்தான் செயற்பட்டார். அவர் வடக்கு–கிழக்கு மாகாண சபையை கலைத்தார். மாகாண சபைக்கு மாற்றீடாக கிராம ராஜ்ஜியம், மற்றும் பிரதேச சபைகளுக்கு அதிகா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரங்களை கொடுக்க வேண்டுமென்று கூறுவதன் மூலம் மாகாண சபைக்கான தனது எதிர்ப்பைக் காட்டி கொண்டார். அவர் தான் சொல்லிக் கொள்வதற்கு எதிர்த்திசையிலேயே சகலதையும் நடத்தி வந்தார்.

கேள்வி- அரசாங்கத்தின் மீது குற்றம் காணும் நீங்கள் அரசாங்கத்தை எதிர்த்து, வடக்கு-கிழக்கில் நடக்கும் போராட்டம் பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

வாசு- எல். ரீ. ரீ. ஈ. ஆரம்பத்தில் ஒரு விடுதலை இயக்கமாக ஆரம்பத்தாலும் அது சக இயக்கப் படுகொலைகள் மூலமும் தனது ஒடுக்கு முறை குணாம்சம் மூலமும் விடுதலையை கருவறுத்து விட்டது. இவர்கள் இஸ்லாமிய தமிழர்களை வடக்கில் இருந்து விரட்டியுள்ளார்கள். இந் நடவடிக்கைகள் மூலம் தமிழ் தேசிய இனத்திற்கு தலைமை தாங்க தகுதியற்ற தன்மையை நிரூபித்து விட்டார்கள். அவர்களின் நிலை வரலாற்றின் நிந்தனைக்குரியது. அதன் வடிவம் பாசிசம். செயல் முறை பயங்கரவாதம் தெரிந்தோ தெரியாமலோ தெற்காசிய நாடுகளை குறிப்பாக இந்தியாவை சீர்குலையச் செய்யும் மேற்கத்தேய நாடுகளின் கருவிகளாக பயன்பட்டு போனார்கள் இவர்களின் அதிகாரம் தமிழ் மக்களால் தணிக்கப்பட்டு மாற்றாக ஜனநாயக சக்திகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

கேள்வி- தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வாக உடனடியாக செய்யப்படவேண்டிய முதற்கட்ட வேலைகள் எவை என கருதுகிறீர்கள்.

வாசு- உடனடியாக இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஜனநாயக நிர்வாக அமைப்பு ஒன்று வடக்கு - கிழக்கில் உருவாக்கப்பட வேண்டும். அதற்கு போதிய அளவு நிதி உதவி வழங்கப்பட வேண்டும். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அரச குடியேற்றங்கள் நிறுத்தப்படும் என்பதற்கான உத்தரவாதமளிக்கப்பட வேண்டும்.

கேள்வி- உங்கள் கட்சி சார்பில் இனப்பிரச்சினை தீர்வாக வரைவு ஏதும் முன்வைத்துள்ளீர்களா?

வாசு- 1984 இலேயே நாம் எமது தீர்வை ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு முன்வைத்து விட்டோம்.

கேள்வி- இந்தியாவில் உள்ளது போன்ற சமஷ்டி ஆட்சி உங்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியதா?

வாசு- அதைவிட உரிமையை அங்கீகரித்திருக்கும் எமக்கு இதை ஏற்பதற்கு தடை ஏதும் இருக்கப் போகிறதா?

கேள்வி- இப்பிரச்சினையை தீர்க்க ஒரு ஒருமித்த கருத்தை பெரும்பான்மை சமூகத்தைச் சார்ந்த அரசியல் கட்சிகளிடையே ஏற்படுத்துவதற்கு நீங்கள் முன் முயற்சி எடுப்பீர்களா?

வாசு- ஆம் நாம் நிச்சயம் எடுப்போம். எனினும் இதன் அமுலாக்கம் யார் அதிகாரத்தில் உள்ளார்களோ அவர்களின் கையில்தான் உள்ளது.

கேள்வி- சிங்கள மக்களின் பெரும்பான்மையினர் இனவாதிகளல்ல தற்போது உள்ள நிலமை 83 காலத்தில் இருந்ததைவிட எவ்வளவோ மாறியுள்ளது. இந்நிலையில் இப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வது இலகுவானதாக இருக்கமல்லவா?

வாசு- நான் சிங்கள மக்களின் பெரும்பான்மையினர் இனவாதிகள் அல்ல என்பதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். அவர்கள் பெரும்பான்மையினராக இருப்பினும் சிறுபான்மையினருக்குரிய அச்ச உணர்வு கொண்டுள்ளதே இதற்கு காரணம். இது இந்தியா முழுக்க தமிழர்கள் என்ற தப்பெண்ணத்தின் விளைவு. அவர்கள் முழு இலங்கையும் சிங்கள பௌத்தர்களுடையது எனவும், இங்கு வாழும் சிறுபான்மை மக்கள் அவர்களால் விரும்பி அளிக்கப்படும் சலுகைகளை மட்டுமே பெற்றுக் கொண்டு வாழ வேண்டுமெனவும் நினைக்கிறார்கள். ஏன் தமிழர்களை மட்டுமல்ல, கிறிஸ்தவர்களைக் கூட சிலர் அந்நிய மானவர்களாக கருதுகிறார்கள்.

> எல்.ரி.ரீ.ஈ ஆரம்பத்தில் ஒரு விடுதலை இயக்கமாக ஆரம்பித்தாலும் அது சக இயக்கப் படுகொலைகள் மூலமும், தனது ஒடுக்குமுறைக் குணாம்சம் மூலமும் விடுதலையைக் கருவறுத்து விட்டது."

கேள்வி- இவ் உணர்வுகளை எப்படி போக்கலாம்?

வாசு- எங்குமே சிறுபான்மையினரின் விடுதலைக்கான போராட்டத்தின் கணிசமான பகுதி வேலைகள் பெரும்பான்மையினருக்கு மத்தியில் செய்யப்பட வேண்டும். வியட்நாம் போராட்டத்தின் வெற்றிக்கு அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட யுத்த எதிர்ப்பு பிரச்சாரங்களும் முக்கிய ஒரு காரணமாகும். இந்த வகையில் சில தமிழ் கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் ஓரளவு பிரச்சாரங்களை மேற்கொண்டிருந்தமை நல்ல விடயம். ஆனாலும் இவை இன்னும் பெரியளவில் செய்யப்பட வேண்டும். மேலும் தொழிலாளர்கள் ஜனநாயக சக்திகள் சிறுபான்மையினர் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் யாவரையும் இணைந்து இதற்கான குரலை ஒலிக்க வேண்டும். பெரும்பான்மை மக்களை சிந்திக்க வைக்க வேண்டும்.

கேள்வி- கடைசியாக நீங்கள் ஒரு மாக்ஸிஸ்ட் என்ற வகையில் சோவியத் யூனியனின் அண்மைக்கால நிகழ்வுகளை எவ்வாறு கருதுகிறீர்கள்?

வாசு- இது சோஷலிசத்திற்கு ஒரு பின்னடைவு ஆனால் அதே வேளை ஒரு சாதகமான அம்சமாகும் உண்டு. ஏற்படும் மாற்றங்கள் முதலாளித்துவத்தை நோக்கிய வீழ்ச்சியாக இருப்பினும் இதுவரை அதிகாரத்தை ஆக்கிரமித்திருந்த கரங்களின் பிடியில் இருந்து மக்கள் விடுபட்டுள்ளதால் இனி அவர்கள் தாங்களே தங்கள் போராட்டத்தை எடுத்துச் செல்ல வழி ஏற்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குட்டி நாய்

ஒரு வீட்டில் ஒரு நாயும் குட்டியும் இருந்தன. குட்டிநாய் தாய்நாயை சங்கிலியால் கட்டிவைத்திருப்பதைக் கண்டு வேதனைப் பட்டது. தாய் நாயிடம் "உன்னை இப்படிக் கட்டி வைத்திருப்பது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்று சொன்னது. தாய் நாயோ" ஆனாலும் எமக்கு எவ்வளவு இறைச்சி விழுகிறது பார், நாம் திறந்து விடப்பட்டு ஊர் ஊராய் திரிந்தாலும் இப்படி சாப்பிட முடியுமா?" என்று சமாதானம் சொன்னது. பின்னர் ஒரு நாள் யாரோ மனிதர்கள் படலையில் நடமாடுவதைக் கண்டு தாய் நாய் எழுந்து நின்று மூர்க்கமாகக் குரைத்தது. குட்டி நாய்க்கு தாய் ஏன் குரைக்கிறது என்று புரியவில்லை எனினும் தாய் செய்வதை பார்த்து தானும் குரைத்தது. பின்பு தாயிடம் நாம் ஏன் மனிதர்களைப் பார்த்து குரைக்க வேண்டும் என்று கேட்டது. தாயோ "அது எசமானரின் எதிரிகள்" என்றது. குட்டி நாய் மனிதாகளுக்கு மனிதர்களேதான் எதிரியா? என்று வியந்தது. பின்னர் இன்னொருநாள் ஒரு பையன் தம்மை நெருங்கி வருவதைக் கண்டு குட்டி நாய் முன்னர் செய்ததை நினைத்து குரைக்கத் தொடங்கியது. தாயோ உடனே குட்டிநாயை கடித்து அது எசமானரின் பிள்ளை குலைக்காதே. நான் செய்வதைப் பார்த்துச் செய் என்று காதினுள் கூறிவிட்டு வாலை ஆட்டிக்கொண்டு தொங்கித் தொங்கி முனங்கியது. குட்டி நாய் க்கு எதுவும் புரியவில்லை. ஒருவனைப் பார்த்து குரைப்பது இன்னொருவனைக் கண்டு வாலை ஆட்டுவது. அடுத்து அதற்கு அதிர்ச்சி தந்த விடயம் மற்றொன்று, அந்த வீட்டு முற்றத்திற்கு வந்த இன்னொரு நாயைப் பார்த்து தாய் நாய் உறுமி உறுமிக் குரைப்பதுதான் அது. அம்மா அதுவும் எமது இனம் தானே ஏன் அதை விரட்டுகிறாய்" என்று கேட்டது குட்டி நாய். தாயோ அது எசமானருக்குப் பிடிக்காது. அது குறைந்த சாதி நாய் என்றது. அது என்ன சாதி என்று கேட்டது குட்டி நாய். அது பற நாய். நாமோ அலுஷேஷன் சாதி, விளக்கியது தாய். குட்டி நாய்க்கு குழப்பமாயிருந்தது. யார் அப்படிப் பெயர் வைத்தது என்று கேட்டது. "மனிதர்கள்தான்" தாய் நாய் சொன்னது. அப்போ அவர்களுக்குள்ளேயும் சாதி இருக்கிறதா? குட்டி

கேட்டது ஆமாம். அவர்களுக்குள் நிறையவே உள்ளது சிலரை வீடு வாசலுள் ஏற விடமாட்டார்கள்.

குட்டிநாய் மெதுவாக வீட்டைச் சுற்றி உலாவி வரத் தொடங்கியது. அது அங்கு பூனை கோழி போன்றவையும் இருக்கக் கண்டது. இப்படி வலம் வருகையில் ஒருமுறை அது அதிர்ச்சியூட்டும் வாசகமொன்றை குசினிப்புறத்தில் கேட்க நேர்ந்தது. "நன்றி கெட்ட நாயே" எசமானி பணிப்பெண்ணை ஏதோ தவறுக்காக இப்படித் திட்டினாள். அவர்களுக்கிடையே இருக்கிற பிரச்சனைக்கு ஏன் எங்கள் பெயரை எடுபபான், அதுவும் நாங்கள் இவ்வளவு விசுவாசமாயிருந்தும் குட்டி நாய் மனதுள் பொருமியது. தாயிடம் போய் முறையிட்டது. தாய் பதில் பேசவில்லை. மீண்டும் "எளிய நாயே விசர் நாயே" என்றெல்லாம் அடிக்கடி திட்டுவதை அது கேட்க நேர்ந்தது. பூனையிடம் போய் அது ஏன் எங்கள் பெயரைச் சொல்கிறார்கள் நீயும் தான் இருக்கிறாய் கோழியும் இருக்கிறது ஆனால் ஒரு போதும் நன்றி கெட்ட பூனையே. எழிய கோழியே" என்று திட்டுவதை நான் கேட்டதில்லை என்று கேட்டது. பூனையோ நாம் உன்னைப் போல் வாலாட்டுவதில்லையே. நீதான் அடித்தாலும் பேசினாலும் திரும்பவும் திரும்பவும் வாலாட்டுவாய், அதனால் தான் என்றது.

சிலகாலத்தின் பின் குட்டிநாயின் கழுத்துக்கு சங்கிலி வந்துவிட்டது. தாய் நாய் வர வர கிழண்டு சென்றது. அது இரவில் குளிர் தாளாமல் ஊளையிடத் தொடங்கியது. இவ்வளவு காலமும் தனது தாய் செய்த சேவைக்கு எசமான் அதன் வயதான காலத்தில் அனுதாபம் காட்டுவார் என எண்ணியிருந்தது. குட்டி நாய். ஆனால் "அந்தக் கிழட்டுநாய் நித்திரைகொள்ள விடாமல் ஊளையிடுகிறது. போய் அதை அடித்து விரட்டு" என்று சீறினார் எசமான். வேலையாள் ஒரு பெரிய தடியெடுத்து தாய்நாயை நையப் புடைத்தான். இப்படி அடிக்கடி அடி வாங்கி உபாதைப்பட்ட தாய்நாய் ஒரு நாள் கட்டை விடுவித்துக்கொண்டு ஓடிப் போய்விட்டது.

நீண்ட நாட்களின் பின் ஒரு நாய்க் கூட்டம் தமது முற்றத்தின் வழியே ஓடுவதை குட்டிநாய் பார்த்தது. பழக்க தோஷத்தில் அது உரத்துக் குரைத்தது. ஆனால் திடீரென அதன் குரைப்பு நின்றது. அந்த மெலிந்தும் சொட்டைபிடித்தும் இருந்த நாய்களின் கூட்டத்தில் அது தனது

தாயையும் கண்டது. முன்னர் எந்த நாய்களை சாதி குறைந்ததென்று விரட்டியதோ அதே நாய்களுடன் அது சேர்ந்து நின்றது. ஆனால் என்னதான் சாதியில் வித்தியாசம் இருந்தாலும் வறுமை எல்லாவற்றையும் ஒரே கோலத்தில்தான் வைத்திருந்தது. அது தனது தட்டைத் திரும்பிப் பார்த்தது. அதில் அதற்குப் போடப்பட்ட இறைச்சித் துண்டங்களை ஈ மொய்த்துக் கொண்டிருந்தது. ஒன்று மட்டும் அதற்குப் புரிந்தது. தன்னைக் கட்டி வைத்திருப்பது வெறும் சங்கிலி மட்டுமல்ல.

> குட்டி நாய்க்கு எதுவும் புரியவில்லை. ஒருவனைப் பார்த்து குரைப்பது இன்னொருவனைக் கண்டு வாலை ஆட்டுவது. அடுத்து அதற்கு அதிர்ச்சி தந்த விடயம் மற்றொன்று, அந்த வீட்டு முற்றத்திற்கு வந்த இன்னொரு நாயைப் பார்த்து தாய் நாய் உறுமி உறுமிக் குரைப்பதுதான் அது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நன்றி மறந்தவன்.

முன்னொரு காலத்தில் அவந்தி மாநகரில் ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். செல்லமாக வளர்ந்து வாலிப வயதை அடைந்தான். காட்டிற்குச் சென்று வேட்டையாடுவதில் அவனுக்கு ஆர்வம் அதிகம்.

ஒரு நாள், வழக்கம்போல் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். துணைவர்களும் கூடவே வந்தார்கள். பல விலங்குகளை அம்பு எய்தி மாய்த்தான். அந்த உற்சாகத்தில் துணைவர்களை விட்டு, காட்டுப் பாதையில் தனியாகச் சென்று விட்டான். திக்கு திசை தெரியவில்லை, அடர்ந்த காடு அது.

அந்திவேளை, இருள் படரத் தொடங்கியது. அரச குமாரனை அச்சம் பற்றிக் கொண்டது. பசியும் களைப்பும் வேறு சேர்ந்து கொண்டன. காட்டைக் கடக்க வழி தெரியவில்லை. தவிப்புடன் அங்கும் இங்கும் அலைந்தான்.

அப்போது பயங்கரமான உறுமல் ஒலி கேட்டது. வேங்கைப் புலி ஒன்று தொலைவில் வருவது தெரிந்தது. குதிரையைப் புதர் மறைவில் அனுப்பிவிட்டு, தான் உயிர்தப்ப ஓடினான். வேங்கை அவனைத் துரத்திக் கொண்டு வந்தது.

நல்ல காலம்; எதிரே அரசமரம் தெரிந்தது. பரபரப்புடன் அதன் மேல் ஏறிக்கொண்டான். உயரத்தில், அகலமான கிளையொன்றில் உட்கார்ந்து கொண்டான். அங்கே அவனுக்கு வேறொரு அதிர்ச்சி காத்திருந்தது. பெரிய கரடி ஒன்று அங்கே இளைப்பாறிக் கொண்டிருந்தது.

அரசகுமாரன் நடுங்கிப்போனான். கீழே மரத்தடியில் வாயைப் பிளந்து கொண்டு நின்றது புலி. அதற்குப் பசி. அரசகுமாரன் கரடியைப் பரிதாபமாகப் பார்த்தான். கரடியின் கண்களில் பரிவு தென்பட்டது. கரடி சொல்லிற்று: "மனிதா! பயப்படாதே! நீ என் இடத்திற்குப் புகல் தேடி வந்திருக்கிறாய். நான் உனக்கு அடைக்கலம் அளிக்கிறேன். நீ இரவு முழுவதும் இங்கு இளைப்பாறி, பொழுது விடிந்ததும், உன் இருப்பிடத்திற்குப் போய்ச்சேர்."



அரசகுமாரன் அகம் மகிழ்ந்தான். அவன் பசியைப் போக்க காய்கனிகளைக் கொடுத்து உதவியது கரடி. இதையெல்லாம் பார்த்துப் பொருமிக் கொண்டிருந்தது கீழே இருந்த வேங்கைப் புலி.

களைப்பு மிகுதியால், அரசகுமாரனுக்குத் தூக்கம் கண்ணை இறுத்தியது. கரடி அவனைப் பார்த்து, "நீ என் மடியில் படுத்து உறங்கு. நீ களைப்பாறியதும் நான் உன் மடியில் படுத்து உறங்குகிறேன்" என்றது. அப்படியே அரச குமாரன் கரடி மடியில் படுத்தான். உறங்கி விட்டான்.

புலி கரடியை நோக்கிச் சொல்லிற்று; "கரடி அண்ணே! இந்த மனிதனை எதற்காகச் சுமந்து கொண்டிருக்கிறீர்கள்? நன்றி கெட்டது இந்த மனித இனம். இன்று பகல் முழுவதும் நம் போன்ற காட்டு மிருகங்களைக் கொன்று குவித்திருக்கிறான் இவன். நாளை உங்களையும் கொல்லத் தயங்க மாட்டான். இவனைக் கீழே தள்ளி விடுங்கள். நான் இன்று முழுவதும் பட்டினி. உங்கள் புண்ணியத்தில் என் பசியை போக்கிக் கொள்ளுகிறேன். தயவு செய்யுங்கள் கரடியாரே!"

கரடி பதிலே சொல்லவில்லை, புலி பலமுறை வேண்டிக் கொண்டது. "என்னைத் தஞ்சமென அடைந்தவனுக்குத் துரோகம் செய்யமாட்டேன். இந்த மனிதனைக் காப்பது என் கடமை" என்று சொல்லிவிட்டது கரடி.

சிறிது நேரத்திற்கெல்லாம், மனிதன் உறக்கம் கலைந்து எழுந்தான்.

கரடிக்குத் தூக்கம் வந்தது. முந்திய ஏற்பாட்டின்படி, கரடி மனிதனின் மடியில் தலை வைத்துப் படுத்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் உறங்கி விட்டது. அப்போது கீழேயிருந்து வேங்கையின் குரல் கேட்டது.

"வாலிபரே! நீங்கள் பகுத்தறிவு படைத்தவர். வருமுன் காப்பதுதான் பகுத்தறிவுக்கு அடையாளம். இந்தக் கரடியை நம்பி வீணுக்கு உயிரைப் பலி கொடுக்காதீர்கள். நாளைக் காலையில் இந்தக் கரடி உங்களைக் கொன்றுவிடப் போகிறது. அதற்கு முன்பே இதை நீங்கள் ஒழித்து விட்டால்? கீழே தள்ளிவிடுங்கள் கரடி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யை. நான் கொன்று தின்று விடுகிறேன். நீங்கள் நாளைக் காலையில் ஆபத்தில்லாமல் வீடு போய்ச் சேரலாம்."

மனிதனின் சுயநல சிந்தனை கிளர்ந்தது. வேங்கையின் வஞ்சகப் பேச்சு மேலும் ஆக்கமளித்தது. விரைவிலேயே முடிவுக்கு வந்தான் அரசகுமாரன்.

உறங்கிக்கொண்டிருந்த கரடியைச் சட்டென்று கிழே தள்ளிவிட்டான். ஆனால் மனிதனின் முயற்சி பலிக்கவில்லை. வஞ்சகம் வெல்ல முடியுமா?

கீழே தள்ளப்பட்ட கரடி, சட்டென்று கீழ்க்கிளையை இறுகப் பிடித்துக் கொண்டு விட்டது. உடனே மேலே ஏறி வந்தது. அரசகுமாரன் நடு நடுங்கிப் போனான். அவமானத்தால் அவன் உடல் குன்றியது. கரடி ஏளனமாகச் சொல்லியது.

"பயப்படாதே மனிதா! நீ இந்த நிலையிலும் என் விருந்தாளி; என்னைத் தஞ்சமடைந்தவன். 'செய்நன்றி கொன்றார்க்கு உய்வு இல்லை' எனும் நன்னெறி வாக்கை உணர்ந்தவன் நீ. படிப்போ பகுத்தறிவோ இல்லாத காட்டு மிருகம் நான். நீ செய்த துரோகத்திற்குத் தெய்வம் உனக்குத் தண்டனை கொடுக்கும். நான் உன்னை ஏதும் செய்யமாட்டேன், பயப்படாதே!"

மறுநாள் நிம்மதி குலைந்து, அரண்மைக்குத் திரும்பினான் அரசகுமாரன்.

(ஆதாரம்; மகாபாரதம்)

ஒரு அதிருப்தியாளரின் அங்கலாய்ப்பு;
"கடவுளை நம்பினோர் கைவிடப் படார்," என்று நம்பி கையெழுத்துப் போட்டேன். ஆனால் அது கை விடப்படாரா, அல்லது கைவிட – "படார்" என்று விழுவதா புரியலையே?

---

சபாநாயகர்; இந்த பா. உ.வின் தநதை இடியப்பக் கடை முதலாளியென்பதற்காக இப்படியா அவன் கையெழுத்துப் போடுவது?. சே........ ஐ வில் றிஜக்ட் இட்.

சபாநாயகர்; சிக்கனமாய் இருக்க வேண்டுமென்று அவரது அரசியல் கொள்கையாயிருக்கலாம் அதை கையெழுத்திலா காட்டுவது?

## இலங்கை வந்த
# B.B.C தமிழோசை ஆனந்தியோடு



சில வார்த்தைகள்.

அண்மையில் லண்டன் B.B.C நிறுவனத்தின் தமிழோசையைச் சார்ந்த திருமதி. ஆனந்தி சூரியப் பிரகாசன் இலங்கை வந்திருந்தார். அவருக்கு இந்து கலாச்சார ராஜாங்க அமைச்சர் திரு. தேவராஜ் தலைமையில் வரவேற்புக் கூட்டமொன்று, கொழும்பு இசுருபாயா மண்டபத்தில் நிகழ்ந்தது.

அருவி சஞ்சிகையுடனான அவரது சிறிது நேர உரையாடலியின் போது தமிழோசை, செய்திகளை தவிர கலையிலக்கியங்கள் பக்கத்தில் எத்தகைய பங்கை ஆற்றி வருகிறது என்று கேட்கப்பட்ட போது, ஆம் நாம் சேக்ஸ்பியர், பேனாட்சா போன்றவர்களின் பல நாடகங்களை மொழி பெயர்த்து ஒலிபரப்பியுள்ளோம். ஹம்லட், ஒடிசி, இலியாட் போன்றவற்றை உதாரணமாக கூறலாம் என்றார்.

இலங்கை கலை இலக்கிய கர்தாக்களுக்கு ஊக்கமளிப்பீர்களா என்றதற்கு, ஆம் நிட்சயமாக. அவர்கள் இங்கிலாந்து வரும்போதெல்லாம் அவர்களை முடியுமானவரை செவ்வி கண்டு ஒலிபரப்பாக்கியுள்ளோம் என்று கூறினார்.

இவற்றைவிட மேலும் பல பயனுள்ள விடயங்களையும் நிகழ்த்தி வருகிறோம். உதாரணமாக "வினாக்களுக்கு விடைதருவோம்." என்ற நிகழ்ச்சியை கூறலாம். இதனால் பலர் குறிப்பாக மாணவர்கள் பயன் படுகின்றார்கள். அவர்களின் கடிதங்களும் பல வந்திருக்கின்றன என்றார்.

அவர் தமது அன்பர்களுக்கு குறிப்பாக ஒரு செய்தியை தெரிவிக்க விரும்புகிறார். வரும் கார்த்திகை மாதத்தில் தமிழோசை "மங்கையர் மாதமாக" பிரகடனப்படுத்தி மங்கையர் சம்பந்தமான சிறப்பு நிகழ்ச்சிகளை நிகழ்த்த உள்ளது; என்பதே இதற்காக இலங்கையிலும், இந்தியாவிலும் உயர் பதவி வகிக்கும் பெண்கள் முதல் சாதாரண ஏழை பெண்கள் வரை சகல தரப்பினரையும், மேலும் பெண்கள் கூட்டமைப்புக்களை, பெண்கள் நலன் காக்கும் அமைப்புக்கள் போன்றவற்றையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார், என்றும் கூறினார். தமிழோசை செய்திகளை பொறுத்தவரை அவை பக்கச்சார்பற்ற நடுநிலையான நிலைப் பாட்டைக் கொண்டவை என குறிப்பிட்டார். பத்திரிகை, கருத்துச் சுதந்திரம் என்பது இங்கிலாந்தில் முழு அளவில் உண்டு எனவும் தணிக்கைகளோ இதர கட்டுப்பாடுகளோ அங்கு இல்லையெனவும் கூறினார்.

சிலர் மக்களுக்கு செய்தி வளங்குவதில் தணிக்கையை வலியுறுத்துகிறார்கள். மக்களை தவறான வழியில் இட்டுச் செல்ல கூடிய செய்திகளை தடுப்பது அவசியம் என வாதிடுகிறார்கள். சிலர், இல்லை பூரண சுதந்திரம் இதிலிருக்கவேண்டும், மக்களுக்கு சலகதும் எல்லாப் பக்க நியாங்களும் தெரிய வேண்டும். அவர் அதிலிருந்து சரியான முடிவை எடுத்துக் கொள்வர். பதிலாக நாம் தெரிவு செய்து வளங்கச் சொல்லக் கூடாது என வாதிடுகிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று வினவிய போது அவர் தாம் இதில் பூரண சுதந்திரம் இருக்க வேண்டுமென்றே கருதுகிறேன் என்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆரம்ப முதலே இணைப்புக்கு ஆதரவானவன்.

## அமைச்சர் திரு. சௌமியமூர்த்தி. தொண்டமான்

இன்றைய அரசாங்கத்தில் உல்லாசப் பயணத்துறை மற்றும் கிராமியக் கைத் தொழில் அபிவிருத்தி அமைச்சுக்களின் அமைச்சராக உள்ள இவர் இதே அரசாங் கத்தில் இதற்குமுன் புடவைக் கைத்தொழில் அமச்சராகவும் இருந்தவர். முன்னர் இல ங்கை இந்தியக் காங்கிரஸ் என்ற பெயரில் இருந்த தற்போதய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரான இவர் முதன் முதலில் 1947ல் நுவரெலியாவில் பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டு வென்று பாராளுமன்ற உறுப்பினரானார். 1960ல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரித்த அவர் அத்தேர்தலில் வெற்றியீட்டிய அக் கட்சித் தலைவி திருமதி. சிறீமாவோ பண்டா ரநாயக்காவால் நியமன பாராளுமன்ற உறு ப்பினராக ஆக்கப்பட்டார்.

1965 தேர்தலில் யூ. என். பி ஐ ஆதரி த்த அவர் அம்முறை ஆட்சிக்கு வந்த யு. என். பி. அரசாங்கத்தால் மீண்டும் நியமன பா. உ ஆக ஆக்கப்பட்டார்.

1974ல் வட்டுக்கோட்டை மகாநாட்டில் உருவான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 1978ல் ஜே. ஆர். அரசில் அமைச்சரவையில் பங் கேற்றுக் கொண்டார்.

பழம் பெரும் தொழிற்சங்கவாதி யாகிய இவரது தொழிற்சங்கம் சர்வதேச தொழிலாளர் சங்கத்தில் (I. L. O) கால் நூற் றாண்டுக்கு மேலாக அங்கம் வகித்து வரு கிறது.

இது அமைச்சர் திரு. தொண்டமான் அருவிக்கு அளித்த விசேட பேட்டி. இன்று தமிழ் மக்களின் தீர்வு சம்பந்தப் பட்ட விட யத்தில் முன்முயற்சியெடுக்கும் அவர் மலை யகத் தமிழர் பற்றியும், தோட்டங்கள் மக்கள் மயமாக்கப்படுதல் பற்றியும் தனது சமாதான முயற்சி பற்றியும் பேசுகிறார்.

**கேள்வி:** *நீங்கள் மலையக தமிழ் மக்களைப் பிரதிநிதிப் படுத்தி நீண்டகாலமாக அவர்களின் நலத்திற்காக உழைத்து வருகிறீர்கள். உங்கள் முயற்சியால் அரசாங்கத்தை அவர்களின் பிரஜா உரிமையை வழங்க முன்வர வைத்துள்ளீர்கள். எனினும் இன்னும் அவர்கள் இந்நாட்டின் புறக்கணிக் கப்பட்ட மக்களாக பின்தங்கிய நிலையிலேயே வாழ்க்கை நடத்துகிறார்கள். இந்த நிலை நீங்க வும் அவர்களின் இதர உரிமைகளையும் தேவை களையும் பூர்த்தி செய்யவும் பாதுகாப்பை உறுதி ப்படுத்தவும் தற்போது மாகாணசபைக்குள்ள அதிகாரங்களின் கீழ் வழிவகைகளுண்டா? அல் லது அதற்கான அதிகாரங்களும் வழிகளும் பிற ப்பிக்கப் படவேண்டுமென்று கருதுகிறீர் களா?*

**தொண்டமான்:** இப்போது தானே இந்த அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவை எப்படி இயங்கு கின்றன என்று இருந்து பார்ப்போம். நடை முறைப்படுத்த இன்னும் எத்தனையோ விடயங்கள் உள்ளன அவற்றை நடைமுறைப்படுத்த முடிகிறதா என்று பார்ப்போம். பின்னர் நடைமுறையை ஒட்டி எப்படி அதிகாரங்களை விஸ்தரிப்பது என்று தீர் மானிக்கலாம். எமக்கு இப்போது மாகாணசபை யிலும் பங்கு இருக்கிறது. பிரதேசசபைகளிலும் பங்கு இருக்கிறது. பிரதேசசபைகளில் முழுப் பங்கு எமக்கு உள்ளது. மாகாணசபையிலோ அதிக பங்குகள் கிடைத்துள்ளது. இவற்றை நாம் பயனுள்ள வகையில் பாவிக்கலாம்.



**கேள்வி:** *அண்மையில் கௌரவ அமைச்சர் தேவராஜ் மலையகத் தமிழ் மக்களை பிரதிநிதப் படுத்தும் பிரதேச சபைகளை ஒன்றிணைத்து பிரதேச சபைகளின் கூட்டாக்கி ஒரு மாகாண சபை போல அமைக்கலாம்மென்ற கருத்தை கூறியிருந் தார். இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**தொண்டமான்;** ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கருத்து ண்டு. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நாம் இருப்பதை ஒழுங்காய் பாவிக்காமல் வேறு விடயங்களுக்குப் போவதில் அர்த்தமில்லை. முதலில் கைக்குக் கிடைத்ததை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அதன்பின் கிடைக்காததற்குப் போகலாம்.

**கேள்வி;** *அரசாங்கம் தற்போது மலையக தோட்டங்களை மக்கள் மயப்படுத்தப்போவதாக அறிவித்துள்ளது. தனியார் மயப்படுத்தலையே இப்படிக் குறிப்பிடுகிறது. ஆனால் அதை எப்படிச் செய்யப் போகிறது. அதில் இம் மக்களின் நலன்களை காப்பதற்காக என்ன உத்தரவாதங்களை முன்வைக்கப் போகிறது என்பதெல்லாம் இன்னும் தெரிய வரவில்லை. இவ்வாறு தனியார் மயப் படுத்துவது பற்றி உங்கள் கருத்து என்ன?*

**தொண்டமான்;** முன்னர் அவை தனியாரிடம்தான் இருந்தன. பின்னர் அரசு தேசியமயமாக்கியது. இப்போது மீண்டும் தனியாரிடம். இன்று அரசாங்கத்தின் கீழ் இருப்பதால் ஏதும் நல்ல நிலமையிலா இருக்கிறது? மக்கள் இன்று மட்டமான நிலையில்தான் இருக்கிறார்கள். நமக்கு மாற்றம் தேவைப்படுகிறது. தனியார் மயப்படுத்துவதால் ஏற்படக் கூடிய அந்த மாற்றத்தை நாம் நமக்குள்ள செல்வாக்குகளைப் பாவித்து இந்த மக்களுக்கு ஒரு புது அந்தஸ்து கிடைக்க வழிசெய்யலாம். இதனால் இதை நாம் ஆதரிக்கிறோம். ஆனால் தொழிலாளரின் குடியிருப்புக்களையும் அவர்களது தோட்டங்கள் மற்றும் இதர உரித்துக்களையும் தனியார் மயப்படுத்தலுக்கு உள்ளாக்கக் கூடாதென கூறியுள்ளோம். அவை- தொழிலாளர்களுக்காக விடப்பட்டு ஒரு கூட்டுறவு அமைப்பாக அமைத்து பராமரிக்கப் படவேண்டும்.

> எதற்காக ஆயுதங்களை எடுத்தார்கள்? உரிமைகளைப் பெறத்தானே? அந்த உரிமைகள் வளங்கப்படுமானால் பின்னர் ஆயுதங்கள் தேவையில்லையே.

**கேள்வி;** *ஒரு ட்ரஸ்ட்டின் கீழ் கொண்டுவரப்படவேண்டும் என்று கூறியிருந்தீர்கள்?*

**தொண்டமான்;** ஆமாம். அப்படி ஒரு ட்ரஸ்ட்டின் கீழ் நிர்வகிக்கப் படவேண்டும்.

**கேள்வி;** *ஏனைய தனியார் மயப்படுத்தல் போலல்லாமல் இது ஒரு வித்தியாசமான தாற்பரியத்தைக் கொண்டிருக்கிறதல்லவா. அதாவது இது ஒரு குறிப்பிட்ட இனமக்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்ட ஒன்றாக எனவே இந்த மாற்றம் அந்த மக்களின் தனித்துவத்திற்கும் பாதுகாப்பிற்கும் பங்கம் ஏற்படுத்துவதாக அமையாதா?*

**தொண்டமான்;** எப்படிச் சொல்கிறீர்கள்?

**கேள்வி;** *அவர்கள் துண்டுப்படுத்தப்பட மாட்டார்களா?*

**தொண்டமான்;** இல்லை. தனியார் மயப்படுத்துவது என்பது தோட்டத்தின் வர்த்தகப் பகுதியை (Commercial Section) மட்டும்தான். அதன் சமூகப் பகுதி (Social Section) இதனால் பாதிக்கப்படப் போவதில்லை. அவர்கள் ஒரே சமூகமாகத்தான் இருப்பார்கள்.

**கேள்வி;** *குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட வாய்ப்பில்லையா?*

**தொண்டமான்;** எப்படி? குடியிருப்புக்கள்தான் ட்டிரஸ்ட்டின் கீழ் இருக்குமே.

**கேள்வி;** *ஆனால் தொழிலாளர்களுக்கு தொழில் பாதுகாப்பு இருக்குமா? அவர்கள் வேலையிழக்க மாட்டார்களா? மேலும் இந்திய கடவுச்சீட்டு உடையவர்கள் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படாது விடப்பட மாட்டார்களா?*

**தொண்டமான்;** இந்தியக் கடவுச்சீட்டுக்காரரின் பிரச்சினை வேறு பிரச்சினை. அது ஒரு அரசியற் பிரச்சினை. அதைத் தீர்ப்பதற்காக நாம் பேச்சு நடத்திக்கொண்டிருக்கிறோம். இதற்கும் அதற்கும் சம்பந்தமில்லை. இதனால் அவர்கள் பாதிக்கப்படப் போவதில்லை. தனியார் மயப்படுத்தப்பட்டபின்னர் அபிவிருத்தி கூடும். அப்போது அவர்களுக்கு கூடுதலான வேலையாட்கள் தேவைப்படும். அதனால் அவர்கள் இன்னும் ஆட்களை சேர்த்துக் கொள்ள நேரிடுமேயொழிய விலக்க நேரிடாது.

**கேள்வி;** *தோட்டங்களிடையே சம்பளங்கள் மற்றும் வசதிகளில் ஏற்றத்தாழ்வு இராதா?*

**தொண்டமான்;** இருக்கட்டுமே. அப்போதுதான் தொழிற்சங்கங்களுக்கு வேலை இருக்கும். கூடுதலான சம்பளம், வசதிகள் கொடுக்கப்படும் தோட்டங்களைக் காட்டி குறைவான சம்பளம் வசதிகள் கொடுக்கப்படும் தோட்டங்கள் குரலெழுப்பலாம். இதன்மூலம் தங்கள் தரத்தை இன்னும் உயர்த்திக் கொள்ளலாம். இப்படியே மேலே செல்லலாம்.

**கேள்வி;** *தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகள் இதனால் மட்டுப்படுத்தப்பட மாட்டாதா?*

**தொண்டமான்;** மட்டுப்படுத்தத்தான் பார்ப்பார்கள். ஆனால் நாங்கள் ஒற்றுமையோடும் பலத்தோடும் இருந்தால் அவர்களால் ஒன்றுமே செய்ய முடியாது. ஒவ்வொரு தோட்டமும் பாரிய தோட்டமாகவே இருக்கும். அவற்றில் பாரிய எண்ணிக்கையில் தொழிலாளர்கள் வேலை செய்வார்கள். இவர்கள் தங்கள் பலத்தின் மூலம் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

கேள்வி: இப்போது நாம் இந்நாட்டின் முக்கியமான பிரச்சனை ஒன்றினையிட்ட விடயத்திற்கு வருவோம். அதாவது இலங்கையின் இனப்பிரச்சனை. இப்பிரச்சினையையிட்டு நீங்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகிறீர்கள். முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் கூட்டுச் சேர்ந்தது முதல் பல்வேறு தடவைகள் இந்தியாவில் பலருடன் இதுபற்றி பேச்சுவார்த்தை நடத்தியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இது தொடர்பாக அறிக்கைகள் விட்டும் ஈடுபாடு செலுத்தி இப்பிரச்சனை நல்லவிதமாக தீர்க்கப்பட வேண்டுமென முயற்சிக்கிறீர்கள். இந்த வகையில் நீங்கள் இனப்பிரச்சனையின் தீர்வுக்கான ஒரு முன் மொழிவை (Proposal) அண்மையில் முன்வைத்திருந்தீர்கள். அதை பல்வேறு தமிழ் கட்சிகளும் வரவேற்றிருந்தன. இதே வேளை அவையும் அனைத்துக் கட்சி மகாநாட்டில் எட்டு அம்சத் திட்டமொன்றை முன்வைத்திருந்தன. அதற்கும் நீங்கள் முன்வைத்தவற்றிற்கும் அதிக வேறுபாடு இல்லை என அவை கூறியிருந்தன. இதேசமயம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்த டாக்டர். சிவகுமார் அவர்களும் ஒரு முன் மொழிவை (Proposal) கையளித்துள்ளார். அவர் இதை எல். ரீ. ரீ. ஈ இனருக்கும் காண்பித்திருக்கக் கூடுமென்பதால் அவர்களுக்கும் இதில் உடன்பாடு இருக்கலாம். அதுகூட நீங்கள் முன்வைத்ததற்கு பெரும்பாலும் ஒத்ததாகவே உள்ளது. எனவே நீங்கள் ஏன் இவற்றின் பொதுவான அம்சங்களை வரித்துக் கொண்டு வேறுபடும் அம்சங்களையிட்டு கலந்துரையாடி ஒரு உடன்பட்ட முடிவுக்கு வந்து தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்கு ஒரு ஆரோக்கியமான தீர்வாக இதை அரசிடம் முன்வைக்க முடியாது?

தொண்டமான்: யார் எப்படி அறிக்கை விட்டாலும் புலிகள் தான் இப்போது போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் அவர்களுடன் பேசி அவர்களை ஒரு உடன்பாட்டிற்கு வரச் செய்வது தான் முக்கியம். நான் தற்போது ஒரு தீர்வை (Proposal) முன்வைத்துள்ளேன். அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளேன். அவர்களின் பதிலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சாதகமானதாக அமைந்தால் அவர்களைபேச்சுவார்த்தைக்கு. கூட்டிவருவதன் மூலம் அவர்களையும் இதனுள் சேர்க்கப் பார்க்கிறேன்.

கேள்வி: முஸ்லீம் தலைவர்கள் உங்கள் தீர்வினை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதா?

தொண்டமான்: ஆம். நான் அவர்களின் கூட்டத்திற்கு சென்று உரையாற்றியிருந்தேன். அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பதிலளித்திருந்தேன். முஸ்லீம்களுக்கான தீர்வையும் எனது முன் மொழிவில் தெரிவித்திருந்தேன்.

கேள்வி: அதில் நிதிப் பங்கீடு பற்றிக் குறிப்பிடுகையில் அது மாகாணசபைக்கு மத்திய அரசு வழுங்குவது போல நேரடியாக முஸ்லீம் பிரதேச சபைகளுக்கு அரசாங்கத்தால் வழுங்கப்பட வேண்டுமென்று கூறியிருந்தீர்கள். அது மாகாணசபைக்கு பிரதேச சபை மீதுள்ள கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட விடயத்தில் பிரச்சனையை ஏற்படுத்தாதா?

தொண்டமான்: எப்படியானாலும ஒன்றுதான். மத்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை பிரதேச சபைக்கு வளங்கும்படியான அறிவுறுத்தலுடன் மாகாணசபைக்கூடாக அதை பிரதேசசபைக்கு வளங்குவதும், நேரடியாக வளங்குவதும் ஒரே விடயந்தான். ஆனாலும் இது பிரச்சனையான விடயமல்ல. தீர்வுகளைமிட்டு ஆராயும் போது பேசித் தீர்த்துக் கொள்ளக்கூடியது.

கேள்வி: இது போலத்தான் பாதுகாப்பு என்ற விடயத்தில் டி. ஐ. ஜி முதலான முஸ்லீம் பொலீஸ் பிரிவு அமைப்பது பற்றிய விடயமுமா?

தொண்டமான்: ஆமாம். இவையெல்லாம் பொது முடிவை எட்டக்கூடிய விடயங்கள்.

கேள்வி: வடக்கு கிழக்கு இணைப்பைப்பற்றி கூறியிருந்தீர்கள்?

தொண்டமான்: நான் ஆரம்பம் முதலே இணைப்பிற்கு ஆதரவானவன். என்று தற்காலிக இணைப்பு என்று உடன்பட்டார்களோ அன்றேல் இணைப்பு என்பது தவிர்க்க முடியாதது என்று ஆகிவிட்டது. இணைப்பு என்பதை கிழக்கில் நடத்தும் பொதுசனவாக்கெடுப்பால் தீர்மானிக்கப் பட வேண்டுமென்கின்ற போது அது முழு நாடும் தீர்மானிக்கும் ஒன்றல்ல என்றாகி விடுகிறது. அதாவது முழு நாட்டுக்குமான ஒரு பொதுசன வாக்கெடுப்பால் இது தீர்மானிக்கப் படுவதாமில்லையே.

கேள்வி: அப்படியானால் வடக்கு கிழக்கில் உள்ள சிங்கள மக்களுக்கு என்ன தீர்வு?

தொண்டமான்: அவர்கள் தாம் வடக்குக்கிழக்கில் சிறுபாண்மையினர் என ஏற்றுக்கொண்டால் அவர்கள் முஸ்லீம்களைப் போல கவனிக்கப் படுவார்கள். ஆனால் அவர்கள் பெரும்பாண்மை இனத்தவர்கள் தான் என்று கூறுவார்களாமின் அவர்கள் பொரும்பான்மை இனத்தவர்கள் வாழும் நாட்டின் இதர பகுதிகளுடன் சேர்ந்து கொள்ளட்டும்.

கேள்வி: அப்படியானால் சிங்களமக்கள் வாழும் வடக்குக் கிழக்குப் பிரதேசப் பகுதிகளை விடுத்து அதன் மாகாண எல்லைகளை மறு வரைவு செய்யலாம் என்று சிலர் கருத்து முன்வைக்கிறார்கள். நீங்கள் என்ன கருதுகிறீர்கள்.

தொண்டமான்: ஆமாம். அப்படிச் செய்யலாம். முன்னர் ரீ. யூ. எல். எவ் இப்படி அம்பாறையின் சிங்கள பகுதிகளை கைவிடலாமென்ற அபிப்பிராயம் கொண்டிருந்தது. அப்படிச் செய்யலாம்.

கேள்வி: அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தது. நீங்கள் செய்யும் இந்தப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிக்கு ஏதுவாக அரசாங்கம் இந் நிபந்தனைகளை தளர்த்த முன்வருமா?

தொண்டமான்: நான் என் வழியில் சில முயற்சிகள மேற்கொண்டுள்ளேன் இதில் என் தீர்வுகளையு வெளியிட்டுள்ளேன். இதனடிப்படையில் புலிகள் சில உடன்பாட்டிற்கு வருவார்களானால் அவ் உடன்பாட்டைமிட்டு பேச்சுவார்த்தைக்கான வழியேற்படுமுகமாக அரசாங்கம் தன் நிபந்தனைகளை விட்டுக் கொடுக்கலாம்.

கேள்வி: ஆயுதங்களைக் கையளிப்பது என்பது பிரச்சனையாக அமையாதா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**தொண்டமான்;** எதற்காக ஆயுதங்களை எடுத்தார்கள்? உரிமைகளைப் பெறத்தானே? அந்த உரிமைகள் வளங்கப்படுமானால் ஆயுதங்கள் தேவையில்லையே. ஆயுதங்களைக் கைவிட்டு விட்டு பேச்சுவார்த்தைக்கு வருவார்களா? உரிமைக்காக ஆயுதம் எடுத்தவன் உரிமை கிடைக்க முன்னர் ஆயுதத்தை கைவிடுவானா? முதலில் உரிமைகளை வளங்கினால் பின்னர் ஆயுதங்களை கைவிடுவார்கள்.

**கேள்வி;** *இடைக்காலத் தீர்வு ஏதும் ஏற்பட வாய்ப்புண்டா?*

**தொண்டமான்;** தீர்வொன்று காண முற்பட்டால் முழுமையான தீர்வாக கண்டு விடவேண்டும். இடைக்காலத் தீர்வென்று அமைக்கப்போனால் அது பின்னர் வேறு பிரச்சனைகளை உருவாக்க வழி செய்துவிடும்.

**கேள்வி;** *நீங்கள் தமிழ் மக்களுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள்?*

**தொண்டமான்;** தமிழ்மக்களுக்கு இன்று தலைவர்கள் இல்லாது போய்விட்டார்கள். அவர்கள் வந்த பிறகுதான் ஏதும் கூறமுடியும்.

**கேள்வி;** *தமிழ் மக்களை நீங்கள் ஒரு தேசிய இனமென்று கருதுகிறீர்களா?*

**தொண்டமான்;** இன்னொருவன் சொல்லித்தான் நாங்கள் யார் என்று நாங்கள் அங்கீகரிக்கப் படத் தேவையில்லை. நாங்கள் யார் என்பதை நாங்கள்தான் காட்ட வேண்டும். மலையகத் தமிழர்களை நாடற்றவன் என்றார்கள். நாங்கள் போராடித்தான் நாங்கள் யாரென்பதை நிலைநாட்டினோம். இன்று எம்மிடம் இரண்டு பிரதேச சபைகள் உள்ளது. அவை ஒரு மாலைதீவின் சனத்தொகையை கொண்டிருக்கின்றன. மேலும் கொத்மலை பிரதேச சபையில் எமக்கு 7 அவர்களுக்கு 7 என பாதிப்பலம் எம்மிடம் உள்ளது. கிடைத்ததைக் கொண்டு முன்னேறுவது. இதுதான் நாங்கள் செய்யவேண்டியது.

**கேள்வி;** *இலங்கை இந்திய உடன்பாட்டால் மாகாண சபை எமக்கு கிடைத்திருந்தது. அதிலிருந்து ஏன் முன்னேறிச் செல்ல முடியாமல் போயிற்று.*

**தொண்டமான்;** ஆம். அதைப் பயன்படுத்தியிருந்திருக்கலாம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். வடமராட்சி தாக்கப்பட்டபோது இந்தியாதான் உணவுப் பொட்டலம் போட்டு எம்மைக் காப்பாற்றியது என்பதை பின்னர் மறந்து விட்டனர். இந்தியா இங்கு இருந்தபோது தமிழ்மொழி அந்தஸ்தை நாம் பெற முடிந்தது. மலையக மக்களின் பிரஜா உரிமையை நாம் பெற முடிந்தது. அந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிட்டோம்.

**கேள்வி;** *இன்று யாழ் குடா நாட்டை முற்றுகை இட்டுக் கொண்டு அரசாங்கம் பேச்டசுவார்த்தைக்கு அழைக்கிறது. இந்நிலையில் எல். ரீ. ரீ. ஈ பேச்சுவார்த்தைக்கு முன்வருமா? அல்லது யுத்தத்திற்குத்தான் வழியேற்படுமா? பேரழிவொன்றைத் தவிர்ப்பதற்கான இறுதிச் சந்தர்ப்பம் நழுவிப் போய் விடுமா?*



*என்று தற்காலிக இணைப்பிற்கு உடன்பட்டார்களோ அன்றே இணைப்பு என்பது தவிற்க முடியாததென்று ஆகிவிட்டது.*

*தனியார்மயப்படுத்துவது என்பது தோட்டத்தின் வர்த்தகப் பகுதியை மட்டும்தான். அதன் சமூகப் பகுதி அதனால் பாதிக்கப்படப் போவதில்லை.*

**தொண்டமான்;** பலமாக உள்ளபோது பேச்சுவார்த்தைக்குப் போவது மூலோபாயம் (Statergy) பலயீனமாக உள்ளபோது பேச்சுவார்த்தைக்குப் போவது சரணாகதி (Suarender) இந்தச் சந்தர்ப்பமும் நழுவிப் போகலாம். ஏனென்றால் முன்னர் பலமாகவிருந்தபோது பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருந்தவற்றை பலயீனமான நிலையில் பெற முடியாது என்பதால் இந்தப் பேச்சு வார்த்தைக்கு முன்வராது போகலாம். அவர்களுக்கு மீண்டும் தம்மை பலப்படுத்திக் கொள்ளலாமென்ற நம்பிக்கையும் இருக்கலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாங்களும் நாங்களும்

மேல் மூச்சுகீழ் மூச்சு வாங்க ஓடி வந்து எனது லைனில் நின்ற போதும் பயம் என்னை விட்டு விலகியதாயில்லை. அவன் கையில் இருந்த துவக்கு என்னை மிரட்டிக்கொண்டேயிருந்தது.

இவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்து க்கறுவல்களிடம் பறிகொடுப்ப தைவிட உழைக்காமலே இருப்பது மேலாகவே பட்டது - அந்தவே ளையில் எனக்கு.

'உழைக்காமலே இருந்து விட் டால் வாழ்வுக்கு வழி?'

'சீ...ஒவ்வொரு பிரச்சினையாய் முடித்துப் பரிசில மெதுவாக நிமிர இந்தக் கறுவல்களின்ர தொல்லை'

'இந்த நாட்டிலும் நிம்மதியாய் வாழேலாது' என் மனம் இறுக்க மாகவே சொல்லியது.

எனது லைனுக்குள் வந்து நின்ற போதும், என்னைத் துரத்திய கறுவலையே என் கண்கள் தேடிக்கொண்டிருந்தன.

அவனைக் காணவில்லை. திரும் பிவிட்டான் போலிருந்தது.

சினந்து, சலித்து, மிரண்டு வெருண்டு கொண்டிருந்த எனக்கு வைகுந்தன் போல் ஒரு உருவம் தெரிய நெருங்கினேன்.

வைகுந்தன்! வழமையை விடச் சற்று வித்தியாசமாக கலகலப்பாக இருந்தான்.

நெஞ்சுடன் இறுகக்கட்டிய கைகள், விரல்களுக்கிடையில் செருகிய புத்தகம். கால்களைச் சற்று அகட்டி அவன் நின்றபோது அவன் உயரத்துக்கு எடுப்பாகவே இருந்தது.

புன்னகை ஒன்றை உதிரவிட்ட வாறே "என்ன யசோ! பேய பைஞ்ச மாதிரி வெருண்டு போய் வாறாய்?" என்றான்.

நீண்ட நாட்களாகவே தேடித்தி ரிந்த வைகுந்தன் அதுவும் அன்று அந்த இடத்தில் கிடைத்தது மட் டற்ற மகிழ்ச்சியாக இருந்தது - பயத்தினூடும்.

வழமை போல் சுகநலங்கள் விசா ரித்துக்கொண்டிருக்கவில்லை. நேரடியாகவே விஷயத்தைத் தொடக்கினேன்.

"இவங்கள் 'கறுவல்'களை என் னடாப்பா செய்யிறது! றோட்டு வழிய நிம்மதியாத் திரிய விடுறாங் களில்லை."

எனது கேள்விக்குச் சிரிப்பைப் பதிலாக்கி முகட்டை வெறித் தான்.

அவனுடைய மூக்குக்கண்ணாடி கீழே விழுவது போலிருக்கச் சரிப் படுத்திக் கொண்டவன், மீண்டும் மெதுவாகச் சிரித்தான்.

எனக்கு எரிச்சலாக வந்தது .

"நான் என்னவோ கேக்கிறன் நீ நக்கல் சிரிப்பு சிரிக்கிறாய் என்ன! ஆத்திரத்தோடு கேட்டேன்.

"சரி சொல்லு" என்றான் கொஞ் சம் சீரியஸ்ஸாக.

"இப்ப கொஞ்சமெண்டால் நான் சரி."

"ஏன் என்ன நடந்தது? "படக் கென அவன் கேட்டபோது விஷயம் அறியும் ஆவல் அவனுள் தெரிந்தது.

"ஒரு கறுவலடாப்பா இருபது வயதிருக்கும். 'கொறஸ்பொண டன்ஸ்' க்கை துவக்கைக் காட்டிக் காசு பறிக்கவந்தான்."

"பொய்த்துவக்காயிருக்கும்." அச ண்டயீனமாகவே சொன்னான்.

"மண்ணாங்கட்டி, பொய்த்து வக்கோ என்னவோ பறிக்க வந் தவன் எண்டதுமட்டும் உண்மை. கத்தியும் வைச்சிருப்பான் தானே!"

"நீ என்ன செய்தாய்?"

"எப்பிடித்தைரியம் வந்ததெரி யாது. தள்ளி விழுத்திப் போட்டு ஓடி வந்திட்டன்."

"உன்னட்ட காசு ஏதாவது இருந் ததோ?"

ஒப்றாக்காரன் கேள்வி கேட்பது மாதிரி வைகுந்தன் கேட்டுக் கொண்டே போனான்.

"மூவாயிரம் பிராங் நாளைக்கு றூம் வாடை கட்டுறதுக்காக ரவி யிட்ட கடனா வாங்கிக் கொண்டு வாறன்."

"இப்ப எத்தின மணி?"

"பன்ரெண்டு"

மணிக்கூட்டைப் பார்க்காமலே நேரத்தைச் சொல்லிவிட்டு அவன் முகத்தை நோக்கினேன்.

"ஆயிரம் பிராங்குக்கு மேல றோட்டில கொண்டு திரியக்கூ டாது. பிரான்ஸில சட்டம் இருக்கு. தெரியுமா!" வைகுந்தன் அதட்டி னான்.

"அதுக்கு!" இது நான்.

"இப்ப சாமம் வேற."

"உன்ர கதை நல்ல கதையா இருக்கு பிரான்ஸில சட்ட மெண்டா பொலிஸ் அல்லோ எடுக்கவேணும் - அக்ஷன் இவய ளிட்ட ஆர் சொன்னது இந்த வேலையைப் பார்க்கச் சொல்லி."

ஆத்திரத்தோடு திருப்பிக் கேட் டேன்.

"அது சரிதான். ஆனால் நாங்க ளும் கொஞ்சம் அவதானமாக நடந்து கொள்ளலாம் தானே!" சொல்லிவிட்டுக் குழைந்தான் வைகுந்தன்.

வைகுந்தனை மடக்கிவிட்டது போல் எனக்குள் பெரிய திருப்தி. தொடர்ந்தேன்.

"போனகிழமை மெற்றோ ஓட ஒட ஒரு தமிழாளிட்ட சங்கிலி பறிச்சிருக்கிறாங்கள். மெற்றோக்க இருந்த மற்றச் சனங்கள் பார்த்துக் கொண்டு தான் இருந்திருக்கு. பரிஸ் பதினெட்டில பதினைஞ்சு பேரின்ரைக்கு மேல சங்கிலி அறுத்திருக்கிறாங்கள்."

வைகுந்தன் கடை வாய்க்குள் சிரித்தவாறு வேறுபக்கம் திரும்பிக் கொள்ள எனக்கு எரிச்சல் அதி கமாயிற்று.

"உன்ர நக்கலகப் பார்த்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

*சஞ்சிகை; ஓசை.*

*பல்வேறு நெருக்கடிகள் நிர்ப்பந்தங்கள் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறிய தமிழர்களினால் ஐரோப்பா கனடா போன்ற இடங்களில் இருந்து முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. குடியேறிய இடங்களில் தாம் முகம் கொடுக்கும் நெருக்கடிகள், பிரச்சனைகள் என்பவற்றையும், இலங்கை அரசியல், சமூகவியல், கலை, இலக்கிய விடயங்களையும் தாங்கி இச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. இவ்வாறு புலம் பெயர்ந்தோரால் வெளியிடப்படும் சஞ்சிகைகளை இலங்கை வாசகர்களுக்கு அறிமுகப் படுத்தும் நோக்கில், அவற்றில் இருந்து சில விடயங்களை மறுபிரசுரம் செய்ய இருக்கின்றோம். அந்த வகையில், இந்த இதழில் பிரான்சில் இருந்து வெளியிடப்படும் ஓசை சஞ்சிகையில் [illegible] ஓசை சஞ்சிகையில் இருந்து [illegible] நாங்களும் என்ற பகுதியை வெளியிடுகின்றோம். காலாண்டு இதழாக வெளியிடப்படும் ஓசை சஞ்சிகை இதுவரை ஏழு இதழ்கள் வெளிவந்துள்ளது. அனேக ஐரோப்பிய சஞ்சிகைகள் அரசியலில் அதிக அக்கறை உடையன. ஓசை சஞ்சிகை இதற்கு மாறாக கலை இலக்கிய சமூகவியல் விடயங்களையே கூடுதலாக தாங்கி வருகின்றது.*




இவையள் ஏன் சங்கிலி போட்டுக் கொண்டு திரியினம் - பத்தாதுக்கு சேட்டையும் திறந்து காட்டிக் கொண்டு ...! அப்பிடித்தானே!" நானும் கிண்டல் தோரணையில் அதட்டினேன்.

"சரி சொல்லு" என்றான்.

தலை மேலும் கீழுமாய் அசைந்தது.

"போனமாசம் விடிய நாலரை மணிக்கு ஒரு பெடியன் சிலோனுக்குரெலிபோன் பண்ண எண்டு போயிருக்கு. ஒரு கறுவல் - மறிச்சுக் காசு கேட்டிருக்கிறான். பெடியனிட்டைக் காசு இல்லை. இல்லையெண்டு சொல்லியிருக்கவேணும் கத்தியால குத்திப் போட்டுப் போட்டான்.

"பெடியன் !"

"சரி"

ஆச்சரிய விழிகளை விரித்தான் அவன்.

"இப்ப ஆறுமாதத்துக்கு முதல் அப்பாவிப் பெடியனொண்டை ஆத்துக்க தள்ளிவிட்டுக் கொல்லினாங்கள். இடைக்கிடை மர்மமான முறையில் கொலைகள் நடக்குது. தமிழாக்களுக்குள்ளேயே. தமிழாக்களே கறுவல்களைக் காசுக்கு வைச்சுச் செய்விக்கினம் எண்டும் சனம் கதைக்குது. இதுகளுக்குப் பிரெஞ்சுப் பொலிஸ் எதுவித அக்ஷனும் எடுக்காதோ!" கேட்டுவிட்டு வைகுந்தனைப் பார்த்தேன்.

"பிரெஞ்சு அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் அழையா விருந்தாளிகள். நாங்கள் அடிபட்டட்டாலென்ன! செத்தாலென்ன! பிரெஞ்சுப் பொலிஸோ, பிரெஞ்சு அரசாங்கமோ பெரிதாக அக்ஷன் எடுக்கப்போவதில்லை. நேரத்தைச் செலவழிக்க விரும்பாது. எங்கட உழைப்பை உறிஞ்சமுடியும் வரைக்கும் உறிஞ்சும். எங்களால ஏதாவது நட்டம் வரேக்கத்தான் எங்களைப் பற்றி யோசிக்கும்."

"சரி அப்ப இந்தக் கறுவல்களின்ர தொல்லைக்கு என்னதான்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

முடிவு? வரவர ஆக மோசமாகிக் கொண்டல்லே போறாங்கள். தமிழாக்கள் கூட இருக்கிற இடங்களில அதுவும் பரிசுக்கு வெளியில இரவு ஏழு மணியெண்டால் வெளிக்கிடேலாதாம். றெயின் ரிக்கற் ஐக் கூடப் பறிக்கிறாங்களாம்"

"உண்மை தான் பிரச்சினை தான். அதே நேரம் இன்னொரு பக்கத்தையும் ... நாங்கள் பாக்க வேணும்...."

"என்ன!என்ன!"

வைகுந்தன் புதுவிஷயமொன்றைச் சொல்லப்போகிறான். என்பதை அவனது இழுவை அழுத்த நான் அவசரமாகி கூர்மையாகி அவன் விழிகளை நோக்கினேன்!

"இந்தப் பிரச்[illegible]னையை ஒரு சமூகப் [illegible]ரச்சினையாகவும் பாக்க வேணும்"என்றான்.

என் கண்கள் அகல விரிந்தன. தொடர்ந்தான்.

"இலங்கைத் தமிழ்ச்சமூகத்தைப் பொறுத்த வரையில - அதாவது நாங்கள், எண்பதுகளின்ர ஆரம்பத்தில அல்லது அதுக்குப் பிறகு தான் இந்த நாட்டுக்குள்ள வாறம்- அகதிகளாக"

"ஓம்"

"ஆனால் கறுவல்கள் எங்களுக்கு முதலே இங்கை வந்து வாழத் தொடங்கினவங்கள்."

"உண்மை."

"எங்கட சராசரித் தொழில் துறையாளை எடுத்துப் பாத்தால் - Cleaning வேலை, Reasturant- வேலை, Advertisment Papers விநியோகிக்கிற வேலை - அவங்கட தொழில் துறையோட ஒத்ததாகத் தான் இருக்கு. அதாவது அவங்களுக்குத் தொழில் ரீதியான போட்டிக்குவாறம்."

"நான் மறுக்கேல்ல"

"ஆனால், நாங்களும் வந்த பிறகு, தொழில் விஷயத்தில அவங்கட நிலைமை எப்பிடி இருக்கு? வேலையில்லாத ஒருத்தன் பரிஸில சீவிக்கிறதெண்டால் எப்பிடி இருக்கும்?"

கண்களை மெதுவாகப் பூஞ்சியவாறு அவன் சர்வசாதாரணமாகவே கேட்ட இந்தக் கேள்வி என்னைச் செம்மையாகவே உதைத்தது.

"Cleaning Company [illegible]ளாயிருந்தாலென்ன, Reasturants ஆக இருந்தாலென்ன, எங்களோட போட்டி போட்டிக் கறுவல்களால வேலை செய்யமுடியேல்ல என்கிறதை விட, எங்கட மோசமான பொருளாதாரப் பிரச்சினை காரணமாமோ அல்லது எங்கட வேறேதாவது குறைபாடோ அவங்களை விட நாங்கள் முதலாளிமாருக்குக் கூட அடிச்சுக் குடுக்கிறம். 'மலிஞ்ச கூலி - பொலிஞ்ச கூலி' எண்டு முதலாளிமார் எங்கள வைச்சுக் கொண்டு அவங்கள வெளியால தள்ளுறாங்கள். போதாததுக்கு சரிவரப் பாஷை தெரியாதது எங்கட இன்னொரு Plus Point - இந்த வேலைகளுக்கு.

நான் மௌனமானேன்.

"அதுக்காக அவங்கட அடாவடித்தனங்களை நியாயம் எண்டு மட்டும் நான் சொல்ல வரேல்ல. இந்தப் பக்கத்தையும் கொஞ்சம் பார்க்கலாம் எண்டு தான் சொல்லுறன்."

வழமை போல் வைகுந்தன் குழப்பி விட மண்டையைப் பிசைந்து கொண்டு நின்ற எனக்கு இரண்டு மெற்றோக்கள் என்னைக் கடந்தது தெரியவேயில்லை.

மீண்டும் காத்திருந்தேன். அடுத்த வரவுக்காக...

**வைகுந்தனுடன் சில நிமிடங்கள்**

**- சசி. யசோதரன்**

31ம் பக்கத் தொடர்ச்சி

இக்கதைப்படி அமரசேகர உமாவை பழிவாங்குவதற்கு இனவாதம் [illegible]ணமல்ல இதே வேலையை ஒரு சிங்கள [illegible] செய்திருந்தாலும் அவர் இதே நடவடிக்கையைத் தான் செய்திருப்பார். எனவே கதை தான் தொடங்கிய விடயத்தை கோட்டை விட்டு விடுகிறது. எந்த ஒரு தமிழ்ப் பாத்திரத்தையும் போடாமல் கூட இக்கதையைக் கொண்டு சென்றிருக்கலாம். இனப்பிரச்சனை கதையின் அடித்தளமேயல்ல. மேலும் பொடிமாத்தயாவின் மனைவியும் தமிழ்ப் பெண்ணாக இருந்து மகன் இறந்து, கணவன் பைத்தியமான பின்னும் அங்கு வாழ்வதை யாரும் தடுக்கவில்லை. அதேபோல் உமாவின் [illegible]கவில்லை. [illegible]லைக்கூட ஏன் சனி [illegible] வரை அமரசேகர தலையிடும் [illegible] யாரும் தடுக்கவில்லை.

இப்படம் இனப்பிரச்சனை பற்றி ஏதாவது படிப்பினையைப் போதிக்கிறதா என்றால் இல்லையென்றே சொல்லவேண்டும். வெறுமனே சில ஜூலைக் கலவரக் காட்சிகளை காட்டியதன் மூலமும் சில சம்பாஷணைகளில் சில கருத்துக்களைச் சொன்னதன் மூலமுமேயன்றி மூலக் கதை மூலம் எதுவுமே சொல்லவில்லை.

படத்தின் யதார்த்தத்திற்கு புறம்பான தன்மைகளை பல இடங்களில் காண முடிந்தது. மனநோயாளர் வைத்திய சாலையில் பைத்தியம் கதவுக் கம்பிகளில் இரத்தம் வடியும் வரை தலையை மோதுவதை டாக்டர் ஏனைய பைத்தியங்களுடன் இருந்து பேசாமல் பார்த்துக் கொண்டு இருப்பதும், அப்பைத்தியம் போத்தல் துண்டால் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய அளவு சுதந்திரமாய் விடப்பட்டிருந்தமையும் ஏற்றுக் கொள்ளமுடியாதவை. கோட் சூட்டுடன் தோன்றும் அமரசேகர - சவப்பெட்டி வியாபாரம் செய்யும் அமரசேகர சாரத்துடன் பென்ஸ்காரில் சேரிக்குப்போய் தண்ணிகேட்கும் அமரசேகர பொருத்தம் காண முடியாதது. இவ்வாறு பல குறைபாடுகள் இருந்தும் நோக்கத்தின் பாற்பட்டவரை சிங்கள மக்களுக்கு ஒரு விழிப்புணர்வைக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையை மட்டும் கொண்டிருந்தது என்பதால் நல்லபடம். ஆனால் சிறந்த படமல்ல.





www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கொலுமுதே குணாட்டுவ

## ஊமைக் கடலின் குரல்



அமைதியான கடலுக்குப்பின்னால் தோன்றும் ஒரு அக்கினிச் சுவாலை. படம் ஆரம்பிக்கிறது. 1983 இனக்கலவரத்தின் காட்சிகளை திரையில் கொடூரத்தின் மனோபாவம் எப்படிப்பட்டதெனச் சொல்கிறது. கமெரா அப்படியே மனநோயாளர் வைத்திய சாலைக்குத் திரும்புகிறது. பயங்கரமாக அலறுகின்ற ஒரு பைத்தியத்தின் வாய் கேட்டபடியிருக்கும் கேள்வி ஒன்றிற்குப் பதிலைத் தேடி கதை மெதுவாக உருவாகிறது. "மகனே! நீ எங்கே போய்விட்டாய்?"

நீண்ட நாட்கள் தடை செய்யப்பட்டிருந்த இந்தச் சிங்களப் படம் ஒன்றுக்கு இரண்டு தடவைகளாக சென்சர் செய்யப்பட்டது. அப்படி என்ன விசேஷம் என்று பார்த்தால் இது தமிழ்மக்களுக்கு நடந்த அநீதி பற்றிப் பேசுகிறது. இதை சிங்கள மக்கள் எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டார்கள் என்று அவர்களை இழிவு படுத்துவதாக தடை செய்த அதிகாரிகள் கருதியிருந்திருக்கலாம்.

சிங்களப்படமாக இருந்தும் துணிந்து 1983 ஜுலை இனக்கலவரங்களை மீளப்பார்க்க முற்பட்டிருப்பது இப் படத்தின் சிறப்பம்சம்.

இந்தப் படத்தின் சிறப்பம்சம் சிங்களப் படமாக இருந்தும் துணிந்து 1983 ஜுலை கலவரங்களை மீளப் பார்க்க முற்பட்டிருந்ததே. அத்துடன் இது தமிழ் மக்களின் பரிதாப நிலையை எடுத்துக் காட்டுகிறது. மெச்சத்தக்க இந்த நோக்கத்தை படம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறது என்று கேட்டால், மன்னிக்க வேண்டும், இதன் மூலக் கதை எந்த விதத்திலும் இனப் பிரச்சனையை மையமாகக் கொண்டது என்று சொல்லக் கூடியதாக இல்லை. பதிலாக இனப் பிரச்சனையென்பது புளியம் பழமும் ஓடும் போல் கதையுடன் ஒட்டாமல் அமைந்திருக்க கதை வேறென்றாக விலகுண்டு போய் விடுகிறது.



கதை இதுதான். இமர சேகர எனும் அதிகாரம் படைத்த செல்வந்தனான சவப்பெட்டி வியாபாரிக்கு அடியாளாக வேலைசெய்பவன் பொடிமாத்தயா. அவனது மனைவி பிரபா என்னும் தமிழ்ப் பெண். மகன் சனி, அவர்கள் வாழும் அதே சேரியில் குடியிருக்கும் உமா எனும் தமிழ்ப் பெண்ணை சனி காதலிக்கிறான். ஒருநாள் அச்சேரிக்கு வந்த அமரசேகர உமாவை தண்ணீர் கேட்கும் சாக்கில் தன் இஷ்டத்திற்குள்ளாக்கப் போய் உமாவால் முகத்தில் காறி உமிழப்பட்டு அவமானப் படுகிறான். இனக் கலவர சூழ்நிலையை பயன்படுத்தி உமாவை அழித்தொழித்துப் பழி தீர்த்துக் கொள்ள திட்டமிடுகிறான். உமாவுக்கும் அவளது தாய்க்கும் சனியே பாதுகாப்புக் கொடுத்து அவர்களுடன் தங்கி விடுகிறான். சனியை உமாவுடனான தொடர்பைக் கைவிடச் செய்யும்படி அமரசேகர பொடிமாத்தயாவை வற்புறுத்துகிறான். சனியின் பிடிவாதத்தை பொடிமாத்தயாவால் மாற்ற முடியாது போக பிள்ளைப் பாசத்தால் அமரசேகரவின் சூழ்ச்சியிலிருந்து தப்பிப் போகும்படி புத்திசொல்கிறான். ஆனால் அமரசேகர வேறு அடியாட்களைக் கொண்டு மகன் சனியையும் உமாவையும் கொலை செய்து விடவே பொடிமாத்தயா பைத்தியம் பிடித்து மனநோயாளர் விடுதியில் சேர்க்கப்படுகிறான். இறுதியில் அங்கே தற்கொலை செய்து கொள்கிறான்.

இக்கதையில் மனநோயாளர் விடுதியின் டாக்டர். அமரசேகரவின் தம்பி. அவர்களிடையிலான உரையாடலில் தமிழ்மக்களுக்கு செய்யப்பட்ட அநீதிகள் பேசப்படுகிறது. அதேவேளை இவர்களின் தந்தை இங்கிலாந்தில் வெள்ளையர்களால் கறுப்பன் என இழிவு செய்யப்பட்டு அவமானமுற்றமையையும் தேசப்பற்று உணர்வு கொண்டிருந்ததையும், முன்னைய நிகழ்வுகளின் நினைவோட்டங்களில் காட்டப்படுகிறது. இது என்ன செய்தியைச் சொல்கிறதென்றால் முன்னர் வெள்ளையருக்கெதிராக போர்க்கொடி தூக்கிய அதே தேசிய வாதத் தலைமைகள் தான் பின்னர் தமிழரை ஒடுக்குவதிலும் முன்னின்றனர் என்பதையே. அதாவது தேசியவாதம் பெருந்தேசியவாதமாகி இனவாதமாகியதையே.

ஆனால் படம் என்ற வகையில் நிறையவே குறைபாடுகள் இதில் தென்படுகின்றன. முதலில் மேற்குறிப்பிட்ட அந்ததேசிய வாத முதலாளி வர்க்கத்தின் வழித் தோன்றலாக காட்டப்படும் அமரசேகர வெறும் சவப்பெட்டிக் கடை வியாபாரியாக இருக்கமாட்டார். அடுத்தது அவர் சேரியில் போய் தண்ணீர் கேட்கமாட்டார். அவர் விரும்பிய பெண்ணை வீட்டிற்கே கொண்டுவரக் கூடியவர்ராமிருப்பாரேயன்றி இவ்வாறு தானே சேரிக்குப் போய் அவமானப் படமாட்டார்.

30ம் பக்கம் பார்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## அழுங்கின மாலை.

மாலை வெய்யில் மங்கிக் கொண்டு போகிறது.
என்னை சோகம் தழுவுகிறது.
மனிதர்களைத் தொலைத்த வீதிகளில்
இன்றுதான் அறிமுகமான பெண்களின் பின்னால்
சைக்கிளில் செல்கிறேன்.
புதர்கள் கப்பிய ஒற்றையடிப்பாதை
முன்னே சைக்கிள் சென்ற தடமிருக்கிறது
பல ஆண்டுகளுக்கு முன்
நான் தொலைத்த நம்பிக்கையும் முனைப்பும்
மன அழுங்கலும் உருகலும்
இன்று நான் பெற்றேன்.
மனிதர்களை இழந்த மௌனமான சாலையில்
ரயர் ஊரிக்கல்லில் எழுப்பும் ஒலி கேட்கிறது.
மாலைவெய்யில் மங்கிக் கொண்டு போகிறது.
என்னை சோகம் தழுவுகிறது.

– நட்சத்திரன் செவ்விந்தியன்.

18.04.1991.





## தொல்பொருட் காட்சிசாலையினுள்!

சகல தேசங்களும்
சன்னத்தால் சல்லடையாக
சரித்து போனான் சூரியன்.
முசோலினியின் கைத்துப்பாக்கி
முத்துப்பதித்த கோட்டுப்பையுள்
மூர்ச்சையற்றுக் கிடந்தது.

பாசிச இராசன் ஹிட்லரின்
பச்சைப்பீரங்கிக் குழல்
பல்லிழந்து உறங்கியது.

இவையும்
இறப்புக்கீதம்
இசையாமல் இருப்பது

கடந்தகாலம்
கசப்பானதால் அல்ல.
இயங்கிக்கிடக்க
இயந்திரதோட்டா
இல்லாமல் போனதால் தான்.

–சுட்டா.

# கவிதாப் பிரவாகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அந்த விரல்களில் சூடுபட்டால் ......

அந்தக் கடல்தான் எத்தனை பெரியது
இன்னும் உலகில் என்னென்ன உள்ளது.

பொருட்கள் யாவும் பங்கிடப் பட்டது.
பிஞ்சு மனதிற்குப் புரியுமா என்ன

எல்லாம் தனக்காய் இருப்பதாய் நினைத்துத்
தொட்டு பார்த்த மெல்லிய விரல்கள்

தொடர்புகளுக்கு அருவி

த. பெ. இ . 1354

இலங்கை.

கொழும்பு – 1

சூடு பட்டதும் துடித்துப் போனதோ
என்ன ஏதெனத் திகைத்துப் போனதோ?

காச்சிய இரும்பின் சூட்டுத் தழும்புடன்
வாழ்க்கை பற்றிய பாடங்கள் தொடங்கட்டும்!

கடலிலும் பெரிய குழந்தையின் மனமோ
கடுகிலும் சிறிதாய்க் குறுகிப் போகட்டும்!

சின்னக் கண்களை மலங்க விழித்து
உலகம் பற்றி மயங்கும் பெண்ணே

கடற்கரைக் கல்லுடன் தனித்துப் போய்விட
உலகம் உன்னையும் ஒதுக்குமே யானால்

கருணை இழந்த மனிதரின் சூல்கள்
கற்களை இனிமேல் பிரசவிக்கட்டும்!

-மதுரகவி

Published by "Aruvi" Publications and Printed at C. R. C Press, No. 119, University Road, Rattanapitiya, Boralesgamuwa

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சமூகப்பார்வை கொண்ட ஓவியரான தே. விக்னமூர்த்தி அண்மையில் மகாவலிகங்கையில் மூழ்கி மரணித்துப் போனார். அவர் வரைந்த ஓவியத்தின் வெளிப்பாடு இங்கே கவிதையாக்கம் பெறுகின்றது.



## மௌனத்தின் வார்த்தைகள்.

– மதுரகவி.

வார்த்தைகள் அதிகம் பேசி யிறியேன்:
வானத்தைக் கூட பார்த்து அறியேன்.
நேற்று இன்றென நாட்களுக் கிடையே
கூறு ஒன்று உண்டென அறியேன்.

உலகுடன் எனக்கு உறவுகள் மறுத்து
சிறைவைத் திருந்த சிறிய நிலமும்
பறிபோய் நிற்கும் என்னிடம் தானே
கதியாய் நீயும் கைகளில் வந்தாய்.

கண்களை மட்டும் அகல விரித்து
மூடிய திரைக்குள் முகத்தைத் தேடி
என்னிடம் ஏதோ கேட்கத் துடிக்கும்
எனது உயிரின் இன்னோர் துளியே

உந்தன் கண்களைத் தூங்க வைக்கும்
தாலாட்டுப் பாடலை அறியேன் ஐயா.
உனக்காய் என்னை வாழப் பணிக்கும்
விதிதான் எத்துனை கொடியது கண்ணே.